விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=



# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 26
ஒலி 031 வள்ளுவர் ஆண்டு 2056 தை 06 ஞாயிற்றுக்கிழமை (19.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## யாழ்.நகைக்கடையில் ரூ.30 இலட்சம் திருட்டு
### கண்டியில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள நகைக்கடையில் 30 இலட்சம் ரூபாய் கொள்ளையிடப்பட்டமை தொடர்பில் கண்டியில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக் கடையொன்றுக்குச் சென்ற குழுவொன்று பொலிஸ்

19

## திருவள்ளுவர் கலாசார மையம்
### யாழ்ப்பாண பண்பாட்டு மையத்துக்கு நேற்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்திற்கு "திருவள்ளுவர் கலாசார மையம்" என நேற்று சனிக்கிழமை பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

திருவள்ளுவரைக் கௌரவிக்கும் வகையில் குறித்த பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்தது.

இந்நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, புத்தசாசன, சமய

19

# ஆலயங்களை விடுவிக்க விரைவில் நடவடிக்கை



### யாழில் அமைச்சர் சுனில் செனவி உறுதி

(யாழ்ப்பாணம்)

ஆலயங்கள் மற்றும் அவை அமைந்துள்ள விடுவிக்கப்படாத நிலங்கள் உள்ளிட்டவற்றை விரைவில் விடுவிப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பேன் என்று புத்தசாசன, சமய மற்றும் அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஹனிதும சுனில் செனவி தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் மற்றுமொரு மிதவை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்கரையில் மிதவை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

கடலில் நிலவும் கடும் காற்றால் குறித்த மிதவை கரையொதுங்கி

19

முன்னாள் சட்டமா அதிபர்
## சிவா பசுபதி காலமானார்



19

## உள்ளூராட்சித் தேர்தலை காலம் தாழ்த்தினால் நீதிமன்றம் செல்வோம்
### பெப்ரல் அமைப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலைக் காலம் தாழ்த்தினால் நீதிமன்றம் செல்வோம் என பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு வாய்ப்பு இல்லை. மாறாக வேறு ஏதேனுமொரு காரணத்துக்காகவேனும் இத்தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் பெப்ரல் அமைப்பு மீண்டும்

04

## மன்னார் துப்பாக்கிதாரிகளின் மாதிரி படங்களை வெளியிட்டு உதவி கோரிய பொலிஸார்

(மன்னார்)

மன்னார் நீதவான் நீதிமன்றத்துக்கு முன்பாகக் கடந்த வியாழக்கிழமை காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்

19



## சாவகச்சேரியில் டிப்பரில் கடல் மணல் கடத்தல்
### இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் கடல் மணல்களை டிப்பரில் கடத்திச் சென்ற இரு சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸார் நேற்று முன்தினம் அதிகாலை கடல் மணல்களை அனுமதிப்பத்திரம் இல்லாமல் ஏற்றி வந்த இரண்டு டிப்பர் வாகனங்களை கைப்பற்றியுள்ளனர்.

குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின்

19

## புங்குடுதீவில் குளத்திலிருந்து
### ஆணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புங்குடுதீவு பகுதியில் உள்ள குளம் ஒன்றிலிருந்து நேற்றுச் சனிக்கிழமை ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையநபரே சடலமாக மீட்கப்பட்டுள்

19

சீனாவிலிருந்து
## 10 பில்லியன் டொலர் இலங்கைக்கு முதலீடு

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசு முறைப் பயணத்தின் விளைவாக, சீன நிறுவனங்களிடமிருந்து, சுமார் 10 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள முதலீடுகளை ஈர்க்கும் வாய்ப்பு இலங்கைக்கு வாய்த்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன நிறுவனங்கள், எரிசக்தி, வாகன உற்பத்தி மற்றும் கட்டுமானம்

04

நடுவு நிலை தவறாது நிலைக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றோடு கலந்த கலை மகன்





## இசைக்கலைமணி அமரர்
## சண்முகநாதன் திபாஹரன்
### (இசைத்துறை விரிவுரையாளர் - கொழும்பு பல்கலைக்கழகம்)

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தின் இசைத்துறை [வயலின்] முதுநிலை தேர்வு நடுவரும் பிரபல்யமான அணிசெய் இசைக் கலைஞருமான இசைக்கலைமணி அமரர் சண்முகநாதன் திபாஹரன் அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம் ஆழ்ந்த துயர் அடைகின்றது.

அமரர் சண்முகநாதன் திபாஹரன் அவர்கள் தாயகத்தில் மட்டும் இல்லாமல் புலம்பெயர் நாடுகளிற்கும் வருகைதந்து இசைத்துறை வளர்ச்சிக்கு பெரும் பணியாற்றியவர்.

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தினால் ஐரோப்பிய ரீதியாக நடாத்தப்பட்டுவரும் அனைத்துலகத் தமிழ்க்கலைத் தேர்வுகளில் தாயகத்தில் இருந்து வருகைதந்து இசைத்துறைக்கான [வயலின்] முதுநிலை தேர்வு நடுவராகக் கடமையாற்றியதுடன் அணிசெய் கலைஞராகவும் இணைந்து செயற்பட்டவர்.

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தின் வளர்ச்சிக்கு அமரர் சண்முகநாதன் திபாஹரன் அவர்கள் ஆற்றிய பணிகள் அளப்பெரியவை.

ஆர்பாட்டம் இல்லாத அமைதியான அற்புதமான இசைக்கலைஞராக இருந்து புலம்பெயர் வாழ் தமிழ்ப் பிள்ளைகளின் தமிழ்க்கலை வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றிய அமரர் சண்முகநாதன் திபாஹரன் அவர்களை அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம் இன்று இழந்து நிற்பது பெரும் துயரை ஏற்படுத்துகிறது. இசைத்துறையின் வளர்ச்சிக்காகவே வாழ்ந்து இசை தந்த புகழோடு மறைந்த அமரர் சண்முகநாதன் திபாஹரன் அவர்களுடைய ஆத்மா அமைதியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம் தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாகராஜா விஜயகுமார்(சங்கர்)
தேர்வுப்பொறுப்பாளர்
அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம் - சுவிற்சலாந்து

(756,3053)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப் பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ் ஞாபனம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 6.57 மணி தொடக்கம் 8.09 மணிவரை யுள்ள சுப முகூர்த்த வேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறி வித்துள்ளனர். (நி-6-8)

# பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/குப்பிழான் விக்கினேஸ் வரா மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (நி)

# எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்த ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள்

(கொழும்பு)



இலங்கைக் கான ஐரோப் பிய ஒன்றியத் தின் தூதுவர் உள்ளிட்ட ஐரோப்பிய ஒன் றிய தேர்தல் கண்காணிப் பாளர்கள்நேற்று சனிக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை சந்தித்தனர்.

இச்சந்திப்பில், இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ, இலங்கை மற்றும் மாலைதீவு களுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் பிரதி பிரதானி லார்ஸ் பிரெடல் மற்றும் ஐரோப் பிய ஒன்றியத்தின் பிரதான கண் காணிப்பாளராக செயற்படும் Nacho Sanchez உள்ளிட்ட தரப்பினர் கலந்து கொண்டனர்.

இரு தரப்புக்கும் இடையே சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் பல குறித்து நீண்ட கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது.

இங்கு, 2024 ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப் பாளர்களால் நடத்தப்பட்ட தேர்தல் கண்காணிப்பு அறிக்கை எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதா சவிடம் கையளிக்கப்பட்டது. (நி)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேச பொது அமைப்புகளின் அனுசரணையுடன் 'விதையனைத்தும் விருட்சமே' செயற்றிட்டத்தின் 42 ஆவது இரத்த தான முகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி ஆதார வைத்தியசா லையின் இரத்த வங்கியில் இடம் பெறவுள்ளது.

எனவே குருதிக் கொடையாளர் களை குறித்த இரத்த தான முகாமில் கலந்து கொண்டு குருதித்தானம் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி

(கொழும்பு)

சீன-இலங்கை உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் ஜனா திபதி அநுர குமார திஸாநாயக்க சீனா வுக்கான தனது நான்கு நாள் உத் தியோகபூர்வ விஜய த்தை வெற்றி கர மாக நிறைவு செய்து நேற்று முன்தினம் வெள் ளிக்கிழமை இரவு நாடு திரும்பி னார். (நி)


## வேலை ஆள் தேவை
(ஆண்/பெண்)

வல்வெட்டித்துறை நகரை அண்டிய ஆரம்பப் பாடசாலை ஒன்றுக்கு பகுதிநேர சுகாதார தொழிலாளி தேவை.

தொடர்புக்கு:-
077 717 8486 (சி-2078)

## We have the following Beauty Products for urgent sale

1. Professional Double wax warmer
2. Cool and Hot Facial Streamer (used)
3. MAC Styler professional hair Straightener
4. MAC Professional LED Curler
5. Makeup Box

MORE DETAILS- PLEASE CONTACT ME DIRECTLY

Contact- 076 665 2229
Price- Negotiable
DK Dazzling Beauty (சி-2077)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN
GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.
Practical to UKVI on Computer
(வாழ்க்கை துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam புதிய பிரிவுகள் ஆரம்பம் IELTS
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
T.P : 077 780 3970, 074 007 1970 (2907)

## யாழ் நகரில் அமைந்துள்ள ஆர்.வி.ஜி பீடி கம்பனிக்கு வேலையாட்கள் தேவை

01. விற்பனையாளர் (Salesman 21-30 வயதிற்குட்பட்ட ஆண்கள்)
தகைமைகள்: முன்பு வேலை செய்த அனுபவம் மற்றும் வேலை செய்த இடத்தின் சான்றுப்பத்திரம், வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் உடன் வரவும் (Bia Data)
கீழ் காணும் முகவரிக்கு நேரில் வரவும்
ஆர்.வி.ஜி பீடி கம்பனி
இல.58 குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்,
தொலைபேசி இலக்கம் : 021 222 4766, 021 222 6806 (3057)

## வேலையாட்கள் தேவை

யாழ்.நெல்லியடிப் பகுதிகளில் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் BEAUTY SPA ஒன்றிற்கு முன் அனுபவம் உள்ள PEDICURE & MANICURE செய்யக் கூடியவர்கள் தேவை.
தங்குமிட வசதி செய்து தரப்படும் (சி-2068)

தொடர்புக்கு:-
076 444 9377

## வேலையாட்கள் தேவை

வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணக்காளர் (Accountant) (பெண்) தேவை.

இடம் : யாழ்ப்பாணம்
தொ.இல : 077 158 0268, 076 889 1308, 077 839 3974

அத்துடன் கொழும்பில் பணி புரிவதற்கு டிரைவர் (Driver) (ஆண்) மட்டும் தேவை. அத்துடன் கணக்காளர் (ஆண், பெண் இருபாலாரும்) (754)

## விற்பனைக்கு

படம் அல்பத்துடன் ஒட்டுப்படாத (Moisture Free)
150 படங்கள் போடக்கூடிய அல்பம் விற்பனைக்கு உண்டு
விஸ்ரா விஷன் கலர் லாப்
347,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் (3059)

## வேலை வாய்ப்பு

No.198 கஸ்தூரியார் வீதியிலுள்ள SB TRAVLES AND TOURS PVT LTD Air Ticketing அலுவலகத்திற்கு அனுபவ முள்ளவர்கள் (Sabre System தெரிந்த வர்கள்) விரும்பத்தக்கது அல்லது அனுப வமற்றவர்களுக்கு Training கொடுக்கப் படும் (ஆண்கள் மட்டுமே விரும்பத்தக்கது) (சி-2064)

தொடர்புக்கு:-
021 222 8555, 077 108 3482

## மணிவிழா வாழ்த்துக்கள்



திரு. பசுபதி தர்மபூபதி
B.Ed, Dip.in.Ed, M.Ed, SLPS 2
(குருபிரதீபா பிரபா)
(அதிபர் யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்)
ஆசிரியர் சேவைக்காலம்
(12.11.1992 முதல் 15.02.2005 வரை)
அதிபர் சேவைக்காலம்
(16.02.2005 முதல் 18.01.2025 வரை)
யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி இன்று 19.01.2025 மணிவிழாக்காணும் அதிபருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இறையருளை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்
தென்மராட்சி அதிபர்கள் சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழி மலிவு விலையில்

புறொயிலர் இறைச்சி 1Kg - 850/=

முட்டை ரூபா 32/=

நியூ சிற்றி கோழிக்கடை
நாவாந்துறை சந்தை, யாழ்ப்பாணம்

(3067)


## உள்ளூராட்சி ...

நீதிமன்றம் செல்லும்.

மேலும் மாகாணசபைத் தேர்தல் சுமார் 6 வருடங்களுக்கும் அதிகமாக காலம் தாழ்த்தப்பட்டுள்ளது. இதனை யும் உரிய காலத்தில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்றார். (ம-7)

## 10 பில்லி ...

போன்ற பல்வேறு துறைகளில் 10 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையிலான முதலீடுகளை இலங்கைக்கு வழங்கத் தயாராக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## பணியாளர்கள் தேவை

01. கொடிகாமம் நகரில் அமைந்துள்ள பான்சி கடைக்கு அனுபவமுள்ள காசாளர் ஆண் ஒருவரும் மற்றும் பெண் பணியாளர் ஒருவரும்,
02. வவுனியா செட்டிக்குளத்தில் அமைந்துள்ள தென்னங் காணியை தங்கி நின்று பராமரிக்க பணியாளர் ஒருவரும் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்

077 811 8948

(C-2084)

## காணி விற்பனைக்குண்டு

அச்சுவேலி சன்னதி றோட் வீரபத்திரர் கோவிலடி
6 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :

077 411 8851
076 882 8694

(3065)

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

1. சமையலாளர்
2. கொத்து / றைஸ் போடுபவர்
3. Waiter

077 407 8235

(3068)


## கண்ணீர் புஷ்பங்கள்



சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் மூத்த பரம்பரை அறங்காவலரும் முன்னாள் அறங்காவலர் சபைத் தலைவருமான (1983-1988) இலங்கை அரச பிரதம சட்டத்தரணியுமான

### உயர்திரு அமரர்
### சிவா பசுபதி

அவர்கள் ஆஸ்திரேலியா சிட்னியில் அம்பாள் பாதகமலங்களை அடைந்துள்ளார். அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் தெரிவிப்பதோடு, ஆத்மா தங்கு சங்களைப்பதி ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளின் பாதக்கமலங்களில் சிவலோகப் பிரார்த்திபெற்று சாந்தியடைய வேண்டுமென கண்ணீர் புஷ்பங்களினால் அஞ்சலி செய்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-2085)

ஆதீன பிரதம குருக்கள் ஐயா, குடும்பத்தவர்கள்,
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோவில், சுதுமலை, மானிப்பாய்.


## நம்பினால் நம்புங்கள்

அதிசயம் ஆனால் உண்மை. உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.

காயத்திரி திருமண சேவை
கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக ரூபி விலாஸ்

076 314 4689
077 844 9861, 076 008 6961

(3061)

## விற்பனைக்கு

- யாழ்.வெலிங்டன் சந்திக்கு அண்மையில் 1 ½ பரப்பு காணியும் மூன்று மாடிக் கட்டிடமும்
- யாழ். நல்லூர் கோயிலுக்கு அண்மையில் பத்து பரப்பு காணியும்
- யாழ். சிவன்பண்ணை வீதியில் பத்து பரப்பு காணியும்
- யாழ். வைத்தியசாலை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக மூன்று கடை முகப்புடன் பத்து பரப்பு காணியும்
- யாழ். கஸ்தூரியார் வீதியில் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அண்மையில் ஐந்து பரப்பு காணியும்
- யாழ். KKS வீதியில் சிவன் கோயிலுக்கு அண்மையில் ஆறு பரப்பு காணியும்
- KKS வீதி மல்லாகத்திற்கு அண்மையில் 200 அடி KKS வீதி முகப்புடன் பத்து பரப்பு காணியும்
- யாழ். Brown வீதியில் பத்து பரப்பு காணியும்
- யாழ். ராசாவின் தோட்ட வீதியில் ஐந்து பரப்பு, நான்கு பரப்பு காணியும்
- யாழ். மின்சார நிலைய வீதியில் நர்மதா நகைக் கடைக்கும் மலாயன் கபேக்கும் இடையில் இரண்டு கடைகளும்
- யாழ். பலாலி வீதியில் SVM எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக ஐந்து பரப்பு காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

T.P : 077 723 2535

(C-2083)


## மரண அறிவித்தல்

### திருமதி கதிரித்தம்பி மங்கையற்கரசி (மங்கை)

(ஓய்வுபெற்ற குடும்ப நல உத்தியோகத்தர் – தெல்லிப்பழை வைத்தியசாலை)



தோற்றம்: 27.05.1939 மறைவு: 11.01.2025

யாழ்.அம்பனை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கனடா Torontoவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி மங்கையற்கரசி அவர்கள் 11.01.2025 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி (MLT Moolai) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் சோதிராஜன் (ராஜு -லண்டன்), முகுந்தன் (கண்ணன்-லண்டன்), துஷிதா (வவா-கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வசந்தி (லண்டன்), சற்சொறுபவதி (தாரணி- லண்டன்), காலஞ்சென்ற தவசீலன் (சீலன்-கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் லண்டனைச் சேர்ந்த அருண்யா, லக்ஷிதன், மதுஷன், சுலக்ஷா, பிருந்தன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் கனடாவைச் சேர்ந்த கபிசன், லக்ஷிகா, லக்ஷயா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் காலஞ்சென்றவர் களான இரத்தினம்மா, முத்தம்மா, சரஸ்வதி, கனகம்மா, தர்மலிங்கம், திருநாவுக்கரசு காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தர், சின்னராஜா குழந்தை, பொற்கொடி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மாலினி(சுன்னாகம் - இலங்கை), சுபந்தினி (கிச்சி - கனடா), றஜனி (சசி - கனடா), வதனி (கனடா), பிரதீபன்(பிரான்ஸ்), ஜெயதீபன்(சுன்னாகம்-இலங்கை)ஆகியோரின் பெரியம்மாவும் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் பெரியதம்பி, தெய்வானை, சீதாதேவி (ஜேர்மனி), இராமாயணம், ஜெயசோதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 (கனடா நேரம்) மணியளவில் பூதவுடல் 2 Stalwart Industrial Dr, Gormley, On LoH1Go, Canada எனும் இடத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 614 6493 (3060) தகவல்: சகோதரி பொற்கொடி

## மரண அறிவித்தல்



### குழந்தை ம.சண்முகலிங்கம்

ஈழத்து நாடகப் பேராளுமை குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் 17.01.2025 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2025) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

[illegible] வீதி, திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி. (C-2080)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








இணுவில் பொது நூலகத்தின் சிறுவர் திறன் விருத்தி மைய மாணவர்களின் கலை விழா கடந்த 12 ஆம் திகதி இணுவில் பொதுநூலகத்தில், தலைவர் ம.கஜந்தரூபன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண கல்வித் திணைக்களத்தின் முன்பிள்ளைப்பருவஅபிவிருத்திப்பிரிவு பணிப்பாளர் த.முகுந்தன், சிறப்பு விருந்தினர்களாக டிப்ளோமா கற்கைநெறிகள் தொழில்நுட்பவியல் கல்லூரியின் பகுதித் தலைவர் பொ.ஜெனார்த்தன், மென் பொறியியலாளர் இராகவன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## யாழ்.கலாசார மத்திய நிலையம்; திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையம் என மாற்றம்




(யாழ்ப்பாணம்)

யாழ். கலாசார மத்திய நிலையத்தின் பெயர் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

குறித்த பெயர் மாற்ற வைபவம் சம்பிரதாயபூர்வமாக நேற்று யாழ். கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, கடற்றொழில் நீரியல் வள துறை அமைச்சர் சந்திரசேகர், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இணைந்து பெயரை டிஜிட்டல் திரை மூலம் மாற்றம் செய்தனர்.

இந் நிகழ்வில் யாழ். மாநகர சபை ஆணையாளர் கிருஷ்ணேந்திரன் யாழ்.இந்திய துணை தூதுவர் சாய் முரளி, புத்தசாசன , சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர்கள், சமய தலைவர்கள், எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் 1.6 பில்லியன் ரூபாய் நிதிப் பங்களிப்புடன் கடந்த 2023 ஆம் ஆண்டு குறித்த கலாசார மத்திய நிலையம் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8-33)

புலோலி மேற்கு பகுதியில் இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வீடு கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. அமெரிக்காவில் வசிக்கும் ஜுனோ மற்றும் சாம் சின்னையா ஆகியோரின் நிதிப் பங்களிப்பில்521 ஆம்



படைப்பிரிவினரினால் நிர்மாணிக்கப்பட்ட வீடு கையளிக்கும் நிகழ்வில் யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் யகம்பத் கலந்து கொண்டு வீட்டினை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார். (படம் - மகாலிங்கம்)

கே GINSOMIN பற்றிய சுருக்கமான அறிமுகத்தை தர முடியுமா?

GINSOMIN என்பது Mega Lifesciences இன் முதன்மையான தயாரிப்புகளில் ஒன்றாகும். இது பல சந்தைகளில் பரவலாக காணப்படுகிறது. GINSOMIN இல் அடங்கியுள்ள சிவப்பு கொரிய பனாக்ஸ் ஜின்ஸெங் 19 விற்றமின்கள் மற்றும் கனியுப்புக்களுடன் செறிவூட்டப்பட்டுள்ளது.

'பனாக்ஸ்' என்ற சொல் ரஷ்ய தாவரவியலாளர் CA Meyer என்பவரால் வழங்கப்பட்ட ஒரு கிரேக்க சொல் ஆகும். அங்கு 'பான்' என்றால் 'அனைத்து' மற்றும் 'அக்சியோஸ்' என்றால் 'அனைத்து நோய்களையும் குணப்படுத்துதல்' என்று பொருள். எனவே 'பனாக்ஸ்' என்ற சொல் உண்மையில் 'அனைத்து நோய்களையும் குணப்படுத்துதல்' அல்லது அனைத்து நோய்களுக்கும் ஒரு நிவாரணம்" என்று பொருள்படுகிறது. 'ஜின்ஸெங்' என்ற சொல் ஒரு சீன சொல்லிலிருந்து வந்தது இதன் பொருள் 'மனிதன்' ஏனெனில் அதன் வடிவம் மனித உடலைப் போன்றது. எனவே சிவப்பு கொரிய பனாக்ஸ் ஜின்ஸெங்கின் வரலாறு 5000 ஆண்டுகளுக்கு முந்தையது. இது 'மூலிகைகளின் ராஜா' என்றும் அழைக்கப்படுகிறது மேலும் இது உலகில் அதிகமாக பரிந்துரைக்கப்படும் மூலிகை மருந்தாகும். சுமார் 6 மில்லியன் அமெரிக்கர்கள் உடல், மன மற்றும் பொது நல்வாழ்வுக்காக இதை தவறாமல் உட்கொள்வதை வழக்கமாக்கிக்கொண்டுள்ளனர்.

அமெரிக்க, சீன, ஜப்பானிய, ரஷ்யன் இந்திய மற்றும் வியட்நாமியன் போன்ற உலகில் கிடைக்கும் அனைத்து வகையான ஜின்ஸெங்கிலும் பார்க்க கொரியன் தூய்மையானது என்றும் சீனாவில் 15, அமெரிக்காவில் 14 மற்றும் ஜப்பானிய வகைகளில் 8க்கும் அதிக எண்ணிக்கையிலான ஜின்செனோசைடுகள் மொத்தம் 24ஐக் கொண்டுள்ளது என்பதாகவும் கூறப்படுகிறது. கொரிய பனாக்ஸ் ஜின்ஸெங்கிற்கு மேலதிகமாக GINSOMIN இல் சிறந்த வாழ்க்கை தரத்திற்காக 19 அத்தியாவசிய விற்றமின்கள் மற்றும் கனியுப்புக்கள் அடங்கியுள்ளன. GINSOMIN இல் உள்ள விற்றமின்கள் மற்றும் கனியுப்புக்கள் சோர்வை சமாளிக்கவும் நமது அன்றாட பணிகளை திறம்பட செய்ய தேவையான சக்தியை வழங்கவும் உதவுகின்றன. GINSOMIN இல் உள்ள விற்றமின் A, C, E மற்றும் செலினியம் போன்ற உயிரகந்தடுப்பிகள் அழற்சி எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன மற்றும் தீவிர சேதத்திலிருந்து நம்மைக் பாதுகாக்கின்றன. மேலும் அவை நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து நம்மை நோய்களிலிருந்து பாதுகாக்கின்றன.

ஒட்டுமொத்தமாக இவை நமது ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் பராமரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.




நீரிழிவு நோயை வென்று ஆரோக்கியமாக வாழ்ந்திட

077 34 100 71 | 011 4 375 364

நாடளாவிய ரீதியிலுள்ள முன்னணி சுப்பர் மார்க்கெட்டுகள் மற்றும் பாமசிகளில் பெற்றுக்கொள்ளலாம்...

ஒரு மாத்திரை ரூ.97.50

இறக்குமதி செய்து விநியோகிப்போர் : A Baur & Company (Pvt.) Limited

(C-045)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் மனித வள முகாமைத்துவ உயர்தர சான்றிதழ் 2024/ 2025 கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம் மற்றும் முதல் மொழி உள்ளடங்களாக ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருப்பதோடு அவற்றுள் குறைந்தது 2 பாடங்களில் திறமைச் சித்தியினை கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லது 30 கிரடிற் கொண்ட SLQF நிலை 1 மற்றும் அதற்கு மேற்பட்ட அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் ஏதேனும் சான்றிதழ் கற்கை நெறியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருத்தமான புலத்தில் NVQF மட்டம் 3 இல் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் மூதவையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய சமமான அல்லது உயர் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண் டும்.

விண்ணப்பப்படிவங்களை இம் மாதம் 25 ஆம் திகதி வரை யாழ்ப்பாண பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் என்னும் முகவரியூடாகவும் மற்றும்021 222 3374 என்னும் தொலை பேசி இலக்கத்தினூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாண பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி)


நீங்கா நினைவுகளுடன் வாழும் பாசமலர்களின்

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கலாபூஷணம்
செல்லையா மெற்றாஸ்மயில்

திதி: 19.01.2025

எம் வாழ்வின் வழிகாட்டியாய்
என்றும் எம்முடன் வாழும்
பாசமிகு தெய்வங்களே!
பதினைந்து ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் மறையாது
மனதில் என்றும் வாழ்ந்து
கொண்டிருக்கிறீர்கள்
அன்புச் சகோதரர்களின்
ஆத்மா சாந்திக்காக
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



திருமதி. உதயராணி
கோபாலகிருஷ்ணன்

18, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்
தொ.இல:- 021 222 3586

(750)


# உட்பிரவேச வாசல் கும்ப அபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வடக்கு பெரிய தம்பிரான் ஆலய உட்பிரவேச வாசல் கும்ப அபிஷேக விஞ்ஞாபனம் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு கிரியைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து விநாயகர், பெரிய தம்பிரான், வைரவர் மற்றும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் அபிஷேக ஆராதனை இடம்பெற்று தொடர்ந்து உட்பிரவேசவாசல் கும்ப அபிஷேக விஞ்ஞாபனம் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (நி-6-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 240 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 250 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 800 |
| தக்காளி | 350 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 220 | 200 |
| கோவா | 250 | 200 | 300 |
| கரட் | 300 | 300 | 400 |
| பூசணி | 120 | 120 | 200 |
| புடோல் | 150 | 140 | 200 |
| வாழைக்காய் | 150 | 160 | 250 |
| சின்ன வெங்காயம் | 450 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 320 | 300 |
| பாகற்காய் | 800 | 400 | 600 |
| வெண்டக்காய் | 200 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 200 |
| பயற்றங்காய் | 600 | 400 | 500 |
| லீக்ஸ் | 350 | 360 | 400 |
| பீற்றூட் | 450 | 350 | 600 |
| கறிமிளகாய் | 800 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 2000 | 2000 | 2000 |
| போஞ்சி | 350 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 180 | 160 |
| கீரை - 1 பிடி | 150 | 80 | 120 |
| தேசிக்காய் | 300 | 350 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 230 | 180-240 |
| இராசவள்ளி | 500 | 600 | 400 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 600 |
| முள்ளங்கி | 140 | 120 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 70 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 200 |

# இராசிபலன்

19.01.2025
தை 06, ஞாயிற்றுக்கிழமை
பஞ்சமி முற்பகல் 8.31 மணிவரை
உத்தரம் பிற்பகல் 6.28 மணிவரை

சுபநேரம் 9.35-11.05 மணிவரை
இராகுகாலம் 5.05-6.35 மணிவரை
சண்டேஸ்வரர் குருபூசை

சந்திராஷ்டமம் - அவிட்டம், சதயம்

வளவன்

**மேஷம்** மற்றவர்கள் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கடகம்** உறவினர்கள் உங்களின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு நடப்பர், பயணங்களால் பலனுண்டு, கூட்டு முயற்சிகளில் முன்னேற்றமுண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**துலாம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மகரம்** குறை சொல்பவர்கள் பாராட்டும் நாள், உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**ரிஷபம்** பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், மன மகிழ்ச்சியோடு செயற்படும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்** குடும்பத்தில் குதூகலம் கூடும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கும்பம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், விரயங்கள் கூடும் நாள், உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**தனுசு** குடும்ப ஒற்றுமை கூடும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கௌரவம் அந்தஸ்து உயரும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** சொந்தபந்தங்கள் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

பொய்யனின் நாக்கு நச்சுப்பாம்பின் விஷத்திலும் கொடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 476

Viber 076 636 3378

19.01.2025

# இந்தியா-சீனா முரண்பாட்டுக்குள் இருதலைக் கொள்ளி எறும்பாய் இலங்கை

**அநுரகுமார திஸாநாயக்கவின் அரசு சீனாவுடன் மேற்கொண்ட ஒப்பந்தங்கள் இரகசியத் தன்மை அல்லாமல் பரகசியத் தன்மையுடையதாய் இருக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.**





பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும் என்றொரு பழமொழியுண்டு. இந்த பழமொழிக்கு நல்ல உதாரணம் இலங்கை என்றால் மிகையாகாது.

ஆம், இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை மிகப் பயங்கரமானது என்பதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டிக் கொண்டேயிருக்கின்றனர்.

ஆட்சி மாற்றத்தின் பின் அனைத்தும் சரியாகி விடும் என்று அனைவரும் நினைத்துக் கொண்டாலும் அது அவ்வளவு எளிதல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

முன்னைய ஆட்சியாளர்களின் தவறுகள் சொற்ப தவறுகள் அல்லவே. அந்தத் தவறுகளின் வெளிப்பாடே தற்போதைய இலங்கையின் நிலை.

இந் நிலை மாற வேண்டும் எனின் அதற்கு மிகப் பெரிய காலம் தேவைப்படும்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டம் என்பது, அது ஒரு அடிப்படை சார்ந்த விடயம்.

அதில் பல கூறுகள் காணப்படுகின்றன. அவை வட்டிக் குறைப்புடைய கடன் மாத்திரமே. அத்துடன் அந்த நிதிமட்டம் வீழ்ந்த பொருளாதாரத்தை மீட்க உதவாது என்பதையும் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

அரிசி மாபியாக்களைக் ஒழிக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை மக்கள் மத்தியில் பாராட்டப்பட்டாலும் அது மிக நீண்ட காலத்திற்கு பொருத்தமுடையதா என்ற கேள்விகளும் உண்டு.

இவ்வாறான நிலையில் அண்மையில் நாட்டில் பெய்த கடும் மழை காரணமாக வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. அறுவடைக்குத் தயாரான நிலையில் இருக்கும் போது மழை வந்திருந்தால் கூட ஓரளவு நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்திருக்கலாம்.

தற்போதைய நிலை: நெல் முற்றவில்லை. முற்றாத நெல் நீரில் மூழ்கினால் அதை எதுவும் செய்து விட முடியாது. அவை முழுமையாய் அழிந்து போவதே முடிவாகும்.

இந்நிலையில் எதிர்காலத்தில் அரிசி மாபியாக்களின் கை ஓங்கும்.

தவிர தேங்காய் விலை என்றுமில்லாதவாறு உச்சத்துக்குச் சென்றிருப்பது அச்சுறுத்தல் மிக்க விடயம். தென்னைகளுக்கு ஏற்பட்ட வெள்ளை ஈ தாக்க நோய் தேங்காய் விலையேற்றத்திற்கு ஒரு காரணமாக அமைந்திருந்தாலும் தற்போது அதிக வெப்பமே தேங்காய் தட்டுப்பாட்டிற்கும் விலையேற்றத்திற்கும் காரணம் எனக் கூறப்பட்டுள்ளது.

தற்போது ஒரு தேங்காயின் விலை 200 முதல் 220 வரை விற்கப்படுகிறது எச்சரிக்கைக்குரியது.

நாட்டை மீட்டெடுக்கும் செயற்றிடத்தில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்திருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்த மிகப்பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ளது.

பிராந்திய நாடுகளான இந்திய-சீன முரண்பாட்டுக்குள் இலங்கை சிக்கித் தவிப்பதை உணரக்கூடியதாக இருக்கிறது.

அநுரவின் இந்திய விஜயம் அண்மையில் நிறைவுற்று ஓர் இரு வாரங்களுக்குள் சீனாவுக்கான விஜயத்தை ஜனாதிபதி மேற்கொண்டிருப்பது சர்வதேசத்தை இலங்கையின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

இந்தியாவின் வளர்ச்சிக்கு சீனா பெரும் அச்சுறுத்தலாக இருப்பது நாம் அறிந்த விடயமாயினும் அநுர இந்தியாவையும் சீனாவையும் எவ்வாறு கையாளப் போகிறார் என்பதே இங்கு கவனிக்கத்தக்க விடயமாகிறது.

இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இலங்கையை மாற்ற நான் ஒரு நாளும் அனுமதியேன் என இந்தியாவில் உரையாற்றினார் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க.

குறித்த ஜனாதிபதியின் பேச்சு சீனாவை மையப்படுத்தியதானதென அரசியல் ஆய்வாளர்கள் கூறியிருந்த நிலையில் ஜனாதிபதியின் சீன விஜயத்தில் அவருக்கு அங்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டதுடன் 15 முக்கிய உடன்படிக்கைகளில் அவர் கையொப்பமிட்டிருக்கிறார்.

குறித்த திட்டங்கள் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான திட்டங்கள் என சீனா தெரிவித்திருந்தாலும் அந்த உடன்படிக்கைகள் இரகசிய உடன்படிக்கைகள் அல்லாமல் உடன் வெளியிட வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

இந்தியாவிலும் சீனாவிலும் இன்று வரை தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் இருப்பதுடன் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஏழ்மையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் இரு நாடுகளும் இலங்கைக்கு பல கோடிகளை வாரி வழங்குகிறார்கள் எனின் இலங்கையில் எம்மை விட வேறு எவரும் காலூன்றி விடக் கூடாது என்ற நோக்கமே முதன்மை பெறுகிறது.

இங்கு தான் இந்திய-சீன உறவை அநுர அரசு மிகக் கவனமாகக் கையாள வேண்டிய நிலை உள்ளது.

நாடு மிகப் பயங்கரமான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. தவிர பிராந்திய வல்லரசுப் போட்டி நாடுகள் இலங்கையை தங்கள் பாதுகாப்பு கேந்திர நிலையமாக வைத்திருக்க முனைகிறது.

இது மொட்டத் தலைக்கும் முழந்தாளிற்கும் முடிச்சுப் போடுவது போல இருந்தாலும் இதைச் சரியாகக் கையாளாவிடின் அது இலங்கையின் எதிர்காலத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்து விடும் என்பதே உண்மையானது.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சீன மொழியை கற்கும் அமெரிக்கர்கள்



அமெரிக்கா - சீனாவிற்கு இடையே உள்ள நேரடிப் போர், மறை முகப்போர் அனைத்தும் உலகம் அறிந்ததே. ஆனால், "ஆடு பகை குட்டி உறவு" என்ற பழமொழிக்கேற்ப, அமெரிக்க மக்கள் சமீப காலமாக சீன மொழியான மாண்டரீனை கற்றுக்கொள்ள அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர்.

உலகில் உள்ள பிற மொழிகளைக் கற்றுக் கொள்ள "டியோலிங்கோ ஆப்" உதவுகிறது. இந்த ஆப் சமீபத்தில் வெளியிட்டுள்ள தரவுகளின் படி, "டியோலிங்கோ ஆப்பில், அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் மாண்டரின் படித்து வருகிறார்கள்.

இவர்களின் எண் ணிக்கை கடந்த டிசெம்பர் 1 ஆம் திகதி முதல் ஜனவரி 13 ஆம் திகதி வரை கிட்ட தட்ட 216 சதவிகிதம் அதிகரித்துள்ளது." என்று தெரி வித்ததுடன், "இதற்கு டிக் டாக் தடை தான் காரணமா?" என்று கேள்வி எழுப்பியுள்ளது. சமீபத்தில் அமெரிக்காவில் டிக் டாக் ஆப்பை தடை செய்தார்கள்.

இதனால், அமெரிக்க மக்கள் "ரெட் நோட்" என்று அழைக்கப்படுகிற டிக் டாக் போன்ற இன்னொரு சீன ஆப்பிற்கு தாவி வருகின்றனர். ரெட் நோட் ஆப் முழுக்க முழுக்க சீனர்களுக்காக வடிவமைக்கப்பட்டது.

அதனால், அந்த ஆப் மாண்டரின் மொழியில் தான் இருக்கும். ஆக, அந்த ஆப் பைப் பயன்படுத்துவதற்காக, அமெரிக்கர்கள் சீன மொழி படித்து வருகின்றனராம்!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசியலில் இறங்குவதற்கு என்ன தகுதி வேண்டும் வியாசரே?

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

**076 097 3126**

என்ற இலக்கத்திற்கு
SMS,
Whats app செய்யுங்கள்



நல்ல தலைவராக என்ன தகுதிகள் இருக்க வேண்டும் வியாசரே?

### நல்ல தலைவராக என்ன தகுதிகள் இருக்க வேண்டும் வியாசரே?

*பிரணாப்-பருத்தித்துறை*

ஒப்பற்ற தலைவன் எனின் தேசத்து மக்கள் மனதால் "தலைவர்", "அண்ணன்" என்று பூசிக்கும் படி இருப்பான்.

தன் உயிரைப் பணயம் வைத்து தன்னை நம்பிய மக்களின் உயிரைக் காக்கும் கவசமாக இருப்பான்.

தன் தாய்மண்ணில் ஒரு பிடியேனும் எதிரி எடுப்பானெனின் அவன் தலையைக் கொய்பவனாக இருப்பான்.

தன் இனத்துப் பெண்களை தாயாய், சகோதரியாய் நினைத்து அவர் மானம் காக்கும் வீரனாய் இருப்பான்.

தன்னுடன் கூட இருப்பவர்களை அண்ணனாய், தம்பியாய், சக தோழனாய் கருதும் மனிதனாய் இருப்பான்.

எதிரியுடனான போரில் தன் தோழன் மடிந்துபோக அவன் ஆயுதத்தை எடுத்து என் இனத்தை மீட்கும் வரை ஓயமாட்டேன் என சபதமெடுப்பவனாய் இருப்பான்.

தன்னை நம்பிய தோழர்கள் மடிந்து போக தான் தப்பியோடாது தன் தோழருள் தன்னைப் புதைப்பவனாவான். அப்படிப்பட்ட தலைவன் இருந்தான், மடிந்தான். இனியொருபோதும் அப்படிப்பட்ட உன்னத தலைவன் உருவாகப் போவதில்லை.

### பெரும்பான்மை - சிறுபான்மை, பெரும்பாண்மை-சிறுபாண்மை இதில் சரியானது எது வியாசரே?

*செல்வரதி-பிளவத்தை*

பட்டுவேட்டிக்கு கனவு கண்டவேளை கட்டியிருந்த கச்சையும் காற்றோடு பறந்துபோனது என்றொரு பழமொழியுண்டு.

இதுபோலத்தான் பெரும்பான்மை-சிறுபான்மை என்பவற்றிற்கு பெரிய "ண்" வருமா சின்ன "ன்" வருமா என்று ஆய்வு செய்து கொண்டிருக்கும் போது எமது நிலத்தை, வளத்தை சூறையாடிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள்.

### கடல்வளம் நிறைந்த நாட்டில் இருந்து கொண்டு தகரத்தில் அடைத்த மீனை உண்கிறோமே?

*விண்ணிலா-கிளிநொச்சி*

மீன்பிடி என்பது ஒரு நாட்டை வளம்மிக் நாடாக மாற்றவல்ல கைத்தொழில். வீழ்ந்து கிடக்கும் பொருளாதாரத்தை மீட்கவல்ல மீன்பிடித் தொழிலை நாம் முன்னேற்றவில்லை.

அதுவே இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு முதல் காரணம் எனலாம்.

எம்மிடம் அதி நவீன மீன்பிடி முறைகள் எதுவும் இல்லை. இப்போதும் அதே பழைய முறைகளைப் பாவித்து வருவதனால் நாமும் முன்னேற முடியவில்லை. எமது நாட்டையும் முன்னேற்ற முடியவில்லை.

இதைச் செய்துவிட்டு இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துவது பற்றி யோசிக்கலாமே.

### பிரளயத்தின் பின்னரும் வாழும் மொழி தமிழ்மொழி என்பதில் தங்களுக்குச் சந்தேகமுள்ளதா வியாசரே?

*ஜஸ்மிகன்-கோப்பாய்*

ஒருவன் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டான். அவனுக்கு ஓடும்போது கண்களை மூடிக் கொண்டு ஓடும் பழக்கமுண்டு.

போட்டி தொடங்கியது. இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு ஓடத் தொடங்கினான். தான் அசுர வேகத்தில் போவதாய் நினைத்துக் கொண்டான். போட்டியின் இறுதியிடம் வந்தது.

கண்ணை விழித்துப்பார்த்தான். தன்னுடன் போட்டியிட்டவர்கள் யாரும் இல்லை. அப்போது அவன் என்ன நினைத்துக் கொண்டான் தெரியுமா? அட அனைவரையும் விட நான் முன்பு ஓடி முடித்து வென்று விட்டேன் என்று.

ஆனால் இவன் எல்லைக் கோட்டை அடைவதற்கு முன்னரே மற்றைய போட்டியாளர்கள் போட்டியை முடித்துவிட்டார்கள் என்பது அவனுக்குத் தெரியாது.

உங்கள் கேள்விப் படிக்கும் போது இதுவே ஞாபகத்துக்கு வந்தது ஜஸ்மிகன்.

### வியாசர் அவர்களே உங்கள் வீட்டு மாட்டுப் பொங்கல் எப்படிப் போச்சு?

*மதுவன்-மீசாலை*

வீட்டு வாசலில் மனைவி போட்ட மாட்டுக் கோலத்தை பார்த்த மாடுகள் மிரண்டு ஓடிய ஓட்டத்தை நீங்கள் வாழ்நாளில் பார்த்திருக்க மாட்டீர்கள்.

ஓடிய மாடுகள் இன்றுவரை திரும்ப வீடு வரவில்லை. இது சத்தியம்




### நாட்டின் எந்த சிறைச்சாலையிலும் அரசியல் கைதிகள் இல்லையாமே உண்மையா வியாசரே

*சுதன்-குப்பிழான்*

இந்த அரசாங்கம் அல்ல. இலங்கையில் வேறு எந்த அரசாங்கம் வந்தாலும் தமிழர்கள் தொடர்பில் அவர்கள் ஒரே கொள்கையையே பின்பற்றுவார்கள்.

ஏழையாய் இருந்தவன் பணக்காரன் ஆகலாம். ஆனால் பணக்காரனாக இருந்தவன் ஏழையாவது மிகக் கொடுமையானது.

இலங்கையில் தமிழினத்தின் நிலையும் இதுவே.

### வாழ்க்கை சிறக்க என்ன செய்ய வேண்டும் வியாசரே?

*பிரவீஸ்-பருத்தித்துறை*

விபத்தொன்றில் ஒரு கண்பார்வையை இழந்த ஒருவர், கடவுளே இனி எனக்கு மீட்சி இல்லையே. நான் இந்தப் பூமியில் வாழ்ந்து பயன் என்ன என்று புலம்பிக் கொண்டிருந்த போது இரு கண்களும் பார்வையிழந்தவர் ஒருவர் நம்பிக்கை எனும் மூன்றாவது கண்ணான வெண்பிரம்பை நீட்டியபடி விரைந்து செல்கிறார்.

எங்கே போகிறீர்கள் எனக் கேட்கிறார் புலம்பிய மனிதன்.

அதற்கு நான் பட்டப்படிப்பை முடித்து விட்டேன். இன்று எனக்கு நேர்முகத் தேர்வு ஒன்று இருக்கிறது அதற்காகத்தான் செல்கிறேன் என்கிறார் அவர்.

அவரின் கைகளைப் பற்றியவர், நண்பா எனக்கு வாழ்க்கையில் முன்னேறும் பாடத்தைக் கற்றுத் தந்து விட்டீர்கள். நன்றி எனக் கூறியபடி புறப்பட்டார்.

வாழ்க்கை சிறப்பதும் இறப்பதும் எம் நம்பிக்கை என்ற பலத்திலேயே உள்ளது.

### அரசியலில் இறங்குவதற்கு என்ன தகுதி வேண்டும் வியாசரே?

*பாலச்சந்திரன்-சாந்தை*

பணபலம் இருக்க வேண்டும். கூட இருப்பவர்களுக்கு பார்த்தும் பார்க்காமல் இறைக்க வேண்டும் (கொத்து, பிரைட்றைஸ், பிரியாணி, பீசா, பர்கர் மற்றும் தண்ணீணீ...)

எம்மைப் பற்றியும் எமது குடும்பம் பற்றியும் எவர் எதைக் கதைத்தாலும் சிரித்துக்கொண்டிருக்கும் மனநிலை வேண்டும்.

வெட்கம், மானம், ரோசம் எதுவும் பார்த்து விடக் கூடாது. வாக்கு வாங்க எந்த எல்லை வரையும் இறங்கிச் செய்யவேண்டும்.

மேற்குறித்த அனைத்தும் சரியென்றால் நாற்சந்தியில் வைத்து நான்கு பேர் உங்களுக்கு இரத்தத் திலகம் இடவேண்டும். அதுவும் உங்கள் ஏற்பாடாக இருக்க வேண்டும்.

மொத்தத்தில் வடிவேலுவின் பாணியில் கூறினால் எவ்வளவு அடித்தாலும் வாங்கக் கூடியவராக நீங்கள் இருந்தால் உங்களுக்கு அரசியலில் குதிக்கும் தகுதி உண்டென்று அர்த்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**திரைப்படம்: ஆடிப்பெருக்கு**
**பாடலாசிரியர்: கே.டி. சந்தானம்**
**இசை: ஏ.எம். ராஜா**
**பாடியோர்: : ஏ.எம். ராஜா, பி. சுசீலா**

கண்ணிழந்த மனிதர் முன்னே ஓவியம் வைத்தார்
கண்ணிழந்த மனிதர் முன்னே ஓவியம் வைத்தார்
இரு காதில்லாத மனிதர் முன்னே
பாடலிசைத்தார் பாடலிசைத்தார்

கண்ணிருந்தும் ஓவியத்தைக் காட்டி மறைத்தார்
இரு காதிருந்தும் பாதியிலே பாட்டை முடித்தார்
பாட்டை முடித்தார்

ஆட வந்த மேடையிலே முள்ளை வளர்த்தார்
அணைக்க வந்த கரங்களுக்குத் தடையை விதித்தார்
ஆட வந்த மேடையிலே முள்ளை வளர்த்தார்
அணைக்க வந்த கரங்களுக்குத் தடையை விதித்தார்
காய்ந்து விட்ட மரத்தினிலே கொடியை இணைத்தார்
தாவி வந்த பைங்கிளியின் சிறகை ஒடித்தார்

கண்ணிழந்த மனிதர் முன்னே ஓவியம் வைத்தார்
கண்ணிருந்தும் ஓவியத்தைக் காட்டி மறைத்தார்
காட்டி மறைத்தார்

பெண் பெருமை பேசிப் பேசிக் காலம் கழிப்பார்
தன் பெருமை குலையுமென்றால் பெண்ணை அழிப்பார்
பெண் பெருமை பேசிப் பேசிக் காலம் கழிப்பார்
தன் பெருமை குலையுமென்றால் பெண்ணை அழிப்பார்
முன்னுமில்லை பின்னுமில்லை முடிவுமில்லையே
மூடர் செய்த விதிகளுக்குத் தெளிவுமில்லையே

கண்ணிழந்த மனிதர் முன்னே ஓவியம் வைத்தார்
இருகாதில்லாத மனிதர் முன்னே
பாடலிசைத்தார் பாடலிசைத்தார்

கண்ணிழந்த மனிதர் முன்னே ஓவியம் வைத்தார்
இரு காதில்லாத மனிதர் முன்னே
பாடலிசைத்தார் பாடலிசைத்தார்

அன்பு வாசகர்களே!
காலத்தால் அழியாத கானம் பகுதியில் உங்களுக்குப் பிடித்த பழைய பாடல்களை, பெயர், முகவரியுடன் வட்சப் செய்யுங்கள் உங்கள் விருப்பப் பாடல் உங்கள் பெயருடன் வெளிவரும்.
076 097 3126

# உலகை திரும்பி பார்க்கவைத்த பெண்கள்



**“சுரங்கத் தொழிலாளி” ஆனி சினன்டு முவாங்கே**

காங்கோவைச் சேர்ந்த சுரங்கத் தொழிலாளியான ஆனி. அத்துறையில் நிலவும் பாலியல் சமத்துவமின்மை, பாலின துன்புறுத்தல் மற்றும் குழந்தை தொழிலாளர்களுக்கு எதிராக தொடர்ந்து செயற்பட்டு வருகிறார். மிகவும் ஆபத்தான சிறிய சுரங்கங்களில் பெண்களும் குழந்தைகளுமே அதிகமாக தொழிலாளர்களாக இருந்து வருகிறார்கள். காங்கோவில் உள்ள பெண் சுரங்கத்தொழிலாளர்களின் தேசிய அமைப்பின் தலைவராக இருக்கிற ஆனி, குழந்தைத் தொழிலாளர்களை ஒழிக்க பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே ஒரே தீர்வு என்பதை தொடர்ந்து அறிவுறுத்தி வருகிறார்.



**“ரகசிய பயிற்சி” ஜாகியா குடாடாடி**

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த டேக்வாண்டோ பாராலிம்பிக் வீராங்கனை. ஒரு கை இல்லாமல் பிறந்த ஜாகியா குடாடாடி, தனது 11 வயதில் இருந்து ஆட்சியாளர்களுக்கு பயந்துகொண்டு ஒரு ஜிம்மில் ரகசியமாக டேக்வாண்டோ பயிற்சியைத் தொடங்கினார். 20 ஆண்டுகால போரைத் தொடர்ந்து, 2021 இல் தாலிபன்கள் மீண்டும் ஆட்சிக்கு வர, டோக்கியோவில் நடந்த பாராலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பு ஜாகியாவுக்கு மறுக்கப்பட்டது. ஆனால், சர்வதேச பாராலிம்பிக் குழுவின் தலையீடு மற்றும் பிரான்சின் ஆதரவுடன், அவர் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறி, 2024 பாரிஸில் நடைபெற்ற பாராலிம்பிக்கில் அகதிகள் அணிக்காக பதக்கம் வென்று வரலாறு படைத்தார்.




**“வன்முறைகளுக்கு மத்தியில” சஃபா அலி**

சூடானைச் சேர்ந்த மகப்பேறு மருத்துவர். கடந்த வருடம், சூடானில் உள்ள அவருடைய மருத்துவமனைக்கு அருகே குண்டுகள் வீசி தாக்குதல் நடந்தபோதும், தன்னை நம்பி மருத்துவமனையில் இருக்கிறவர்களை கைவிட்டு வெளியேற மறுத்துவிட்டார். அதேநேரம், தன் மருத்துவமனை அருகே இராணுவம் மற்றும் துணை இர்ாணுவ ஆதரவுப் படைகளுக்கு இடையே நிகழ்ந்து கொண்டிருந்த மோதல்களுக்கு இடையேயும் [illegible] தன் மருத்துவமனையில் வேலைபார்த்து வந்த தன்னார்வ ஊழியர்களையும் கர்ப்பிணிப் பெண்களையும் பாதுகாப்பான இடத்துக்கு வெளியேற்ற உதவினார். இத்தனை போராட்டங்களுக்கு மத்தியிலும் மருத்துவமனையில் இருக்கிற பெண்களுக்கு தேவையான மகப்பேறு சிகிச்சை, அறுவை சிகிச்சையும் செய்து வருகிறார். வன்முறை காரணமாக ஏற்பட்ட மருத்துவப் பணியாளர்கள் பற்றாக்குறையை சரியாக்க, புதிதாகப் பட்டம் பெற்ற சுமார் 20 பெண் மருத்துவர்களுக்கு மகப் பேறு மருத்துவத்தில் பயிற்சியும் அளித்து வருகிறார்.



**“தைரிய ரோல் மாடல்” கிசெல் பெலிகாட்**

ஃபிரான்ஸைச் சேர்ந்தவர். கிசெலின் முன்னாள் கணவர், போதைப்பொருள் கொடுத்து அவரை பாலியல் பலாத்காரம் செய்ததோடு, தன் நண்பர்களையும் கிசெலை பாலியல் பலாத்காரம் செய்யும்படி தூண்டியிருக்கிறார். கிசெலை வன்கொடுமை செய்ததை அவர் வீடியோவாகவும் பதிவு செய்திருக்கிறார். இந்த குற்றச்சாட்டுகள் அனைத்தும் நிரூபிக்கப்பட்டுவிட்டது. பாலியல் வன்கொடுமை சட்டப்படி இந்த வழக்கில், கிசெலின் பெயரை வெளிப்படுத்தாமலே இருந்திருக்க முடியும். ஆனால், அவர் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் அனைவர் முன்னிலையிலும் தண்டனை பெற வேண்டும் என்பதற்காக, விசாரணையை வெளிப்படையாக நடத்தும்படியும், வீடியோக்களைக் காண்பிக்கும்படியும் கிசெல் கேட்டுக் கொண்டார். இந்த வழக்கில் தொடர்புடைய சில ஆண்கள் மட்டுமே குற்றத்தை ஒப்புக் கொண்டனர். பாலியல் வன்கொடுமையை இத்துணை மனவுறுதியோடு எதிர்கொண்ட கிசெல், உலகெங்கிலும் உள்ள பெண்களுக்கு தைரிய ரோல் மாடலாக மாறியிருக்கிறர்ர்.



**“போருக்கு நடுவில்” சாமியா**

சிரியாவில் உளவியல் நிபுணராக பணியாற்றிக்கொண்டிருக்கிறார் சாமியா. பல வருட உள்நாட்டுப்போர், ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தது, பிழைத்தவர்களும் பயத்துடனும் மனப்பதற்றத்துடனும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் மன நலனை ஆற்றுப்படுத்தும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார் சாமியா. வடகிழக்கு சிரியாவில் உள்ள அகதிகள் முகாமில் சர்வதேச மீட்புக் குழுவால் நடத்தப்படும் மனநல மருத்துவமனையில் பணி யாற்றிக் கொண்டிருக்கும் சாமியா, போர் காரணமாக அகதிகளான தனிநபர்களுக்கும், குடும்பமாக அகதிகளானவர்களுக்கும் உளவியல் ஆலோசனை வழங்கிக் கொண்டிருக்கிறார்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரம் பொன்னானது....

பொழுதெல்லாம் ஓடினாலும் அதே இடத்திலேயேதான் ஓடுவான் அவன் யார்?

ஓடாமல் நின்று போனாலும் நாளுக்கு இரு முறை சரியான நேரம் காட்டும் அது என்ன?
பதிலை யோசியுங்கள்... ஈஸியாக இருக்குமே "கடிகாரம்" எனும் பதில்.

சரி, பொதுவாக உலகமெங்கும் கடிகார விளம்பரம் என்றாலே அனைத்துக் கடிகாரங்களும் 10.10 என நேரம் காட்டுவதாகவே மணி முள்ளும் நிமிட முள்ளும் இருக்கும்.

அது என்ன உலகம் முழுவதும் 10.10 என நேரம் காட்டுவதாகவே விளம்பரக் கடிகாரங்கள்.
10.10 என்பது கடிகாரத்தைக் கண்டு பிடித்தவர் மறைந்த நேரமா?

அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன் சுட்டுக் கொல்லப்பட்ட நேரமா? அவர் இறந்த போது, கடிகாரம் அப்படியே உறைந்து போய் நின்ற நிமிடம் 10.10 ? இல்லை. அமெரிக்கா அதிபர் ஜான்.எஃப் கென்னடி அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட நேரமா? இப்படியாக இதுவரை நீங்கள் அறிந்த வரலாறு எது?

இது இல்லாமல் நீங்கள் அறிந்து அறிந்த புதிய தகவல்கள் ஏதும் உள்ளதா?

சரி, அடுத்த கேள்வி. பொதுவாக ஆண்கள் என்றாலே கடிகாரத்தைத் தங்களின் இடது கையில் கட்டுகிறார்கள். பெண்கள் என்றாலே கடிகாரத்தை வலது கையில் கட்டுகிறார்கள். அது ஏன்?

இன்றும் கூட கிராமங்களில் நேரம் என்னவாக இருக்கும் என்றவுடன் நெற்றிக்கு மேலாகக் கைகளை வைத்து வானில் சூரியனைப் பார்த்து இப்போது நேரம் இதுவாக இருக்கும் என்று கூறும் சூரியக் கடிகாரம், இன்னும் சிலர் நின்ற இடத்திலேயே இருந்து தன் நிழலைப் பார்த்து நேரம் இதுவெனக் கூறும் நிழற் கடிகாரம் அடுத்து மணற் கடிகாரம், சீனர்கள் கண்டு பிடித்த நீர்க் கடிகாரம், சுவர்க் கடிகாரம், ரிஸ்ட் கடிகாரம், ஸ்மார்ட் கடிகாரம், மொபைல் போன் கடிகாரம் என கடிகாரங்களின் அவதாரங்கள் ஏராளம்.

கி.பி 510 ஆம் ஆண்டு வாக்கில் ஜெர்மன் நாட்டை சேர்ந்த பீட்டர் ஹென்லீன் எனும் ஒரு பூட்டு வியாபாரி வடிவமைத்த கடிகாரம் தான் இன்று நாம் பயன்படுத்தும் கடிகாரத்தின் அடிப்படை மொடல்.

கடிகாரங்கள் காட்டும் 10.10 எனும் மணி முள், நிமிட முள் பார்வைக்கு மகிழ்ச்சியான ஸ்மைலி எமோஜியை போல் உள்ளதுதானே. உங்களுடைய பார்வைக்கு படும் கடிகாரங்கள் புன்னகையைக் காட்டி உங்களையும் புன்னகைக்க வைக்கவே இந்த 10.10.

சரி அடுத்து ஆண்கள் அனைவரும் இடது கையில் கடிகாரம், பெண்கள் பெரும்பாலும் வலது கையில் கடிகாரம் கட்டுவது ஏன்? எதற்கு? ஏதோ ஒரு பொருளை கீழே தவற விடுகிறீர்கள். உடனடியாக அதனை எடுக்க வேகமாக உங்களுடைய எந்தக் கை நீளும். வலது கையா? இடது கையா?

வேகமாகச் செல்லும் பேருந்தில் ஏறிவிட வேண்டும் என்று ஓடி படிக்கட்டுப் கம்பியைப் பற்றுகிறீர்கள் எந்தக் கையால் பிடிப்பீர்கள். வலது கையாலா? இடது கையாலா? அனைவரின் பதிலும் வலது கை என்றே வரும். ஆம் வேகமாக, அவசரமாக நீள்வது வலது கைதானே. அப்படியாக நீளும் வலது கையில் கடிகாரம் கட்டுவது கடிகாரத்திற்கு பாதுகாப்பானதா?

கடிகாரக் கண்ணாடி சேதம் அடைந்து விடாதா? எனவேதான் ஆண்கள் தங்களின் கடிகாரத்தை வலது கையில் கட்டாமல் இடது கையில் கட்டுகிறார்கள். ஆனால் பாருங்கள் பெண்கள் எதிலும் எப்போதும் பொறுமையாக நிதானமாக செயற்படுவார்கள். அவர்கள் வலது கையில் கடிகாரம் கட்டுவதால் கடிகாரத்திற்கோ கடிகாரக் கண்ணாடிக்கோ சேதம் ஏற்படாது. இன்னும் சில பெண்கள் வலது கையில் கட்டிய கடிகாரத்தின் கண்ணாடி கையின் வெளிப்புறமாக இல்லாமல் கையின் உட்புறமாக இருப்பதாகக் கட்டிக் கொள்கிறார்கள்.

கடிகார நேரம் கூட அவர்களுக்கு மட்டுமே பார்க்க முடிவதாக!

வலது கையில் கடிகாரம் கட்டிய, கட்டும் ஆண்கள் உண்டா?

நடிகராக இருந்து அமெரிக்க ஜனாதிபதியாக ஆன ரொனால்டு ரீகன் வலது கையில் கடிகாரம் கட்டும் வழக்கம் கொண்டவர்.

தமிழ்நாட்டில் நடிகராக இருந்து முதல்வர் பதவியில் அமர்ந்த எம்ஜிஆர் கூட வலது கையில் கடிகாரம் கட்டும் வழக்கம் கொண்டவர்.

○ வீ.சபிரேஷ்



# ஆச்சி அறிவுரை

## நாற்சார் வீடு

### என்ன பேராண்டி...

சோதினை எல்லாம் முடிச்சிட்டியா ? நித்திரை முழிச்சு படிச்சிருப்பாய். பரீட்சையை நினைச்சு மனது இறுக்கமாய் இருக்கும். அப்பாவோட வயல் பக்கம் போய் அந்த பச்சைப் பசேல் இயற்கையை ரசித்துப்பார். பச்சை வயல், மெல்லிய காத்து தேகத்திலபட மனசிலை இருக்கிற இறுக்கமெல்லாம் பறந்துபோய்விடும்.

இண்டைக்கு பாட்டி நாற்சார் வீடு பற்றித்தான் சொல்லப்போறன். நாற்சார் வீடு எண்டுறது எங்கட தமிழ்ப் பாரம்பரியத்தோட பின்னிப்பிணைஞ்சது.

நாற்சார் வீடுகளின்ர நடுப்பகுதியில செவ்வக வடிவான முற்றம் இருக்கும். அத சுத்தி உயரமான நடைமேடை அமைப்பு இருக்கும்.

நடு முற்றத்தைச் சுற்றி நாலு பக்கமும் பல அறைகள் இருக்கும். மழை, வெயில் எதுவெண்டாலும் வீடு வெளிச்சமா இருக்கும்.

மழை காலங்களில மழையை ரசிக்கிறதுக்கு இந்த நாற்சார் வீடுகள் திறம்.

அதோட நிலவை ரசிச்சபடி தூங்கிறதுக்கும் இது சிறப்பு. முந்தின காலத்தில அண்ணன், தம்பி, அக்கா, தங்கை குடும்பமா, ஒண்டா கூட்டா வாழுறது உனக்குத் தெரியுமோ.

ம்ம்... இப்ப நீ வருசத்தில ஒருதரம் தானே மாமா, அத்தை வீட்டை போறனி. கூட்டுக்குடும்பத்தின்ர சிறப்பை உனக்கு உன்ர அப்பா, அம்மா சொல்லித்தர மாட்டினம்.
ஏனெண்டா பிறகு நீ அத்தை, மாமாக்களோட ஒண்டா இருக்க கேட்டுடுவாய் எண்டு பயம்தான்.

அன்பு – சந்தோசம் – துக்கமெண்டால் தோள் கொடுக்கச் சொந்தம், துயரத்திலை பங்குகொள்ளுற மனநிலை, விட்டுக்கொடுத்து வாழுற வாழ்க்கை, பகிர்ந்துண்ணுற சிறப்பு, பெரியோரை மதித்து நடக்கிற நடத்தை இப்படி நாற்சார் வீட்டில கூட்டுக்குடும்பமாய் வாழுற வாழ்க்கை.சொர்கமாடா பேராண்டி.

இப்பத்தைக் காலம் அப்படியோ ? மரங்களைத் தறிச்சு மாடி வீடுகட்டி, ஆளுக்கொரு அறைகட்டி, ஜன்னலைப் பூட்டி வச்சிட்டு ஏ.சி போட்டு குளிர்காயிறதெல்லாம் ஒரு வாழ்க்கையோ ?
காசு, பணம் வாழ்க்கைக்குத் தேவைதான். ஆனா அது ஒருநாளும் வாழ்க்கை ஆகாது.

உடம்பு இயலாமல் படுத்திருக்கேக்க காசு எழும்பி வந்து ஒருவாய் தண்ணி தராது.
அந்தரத்துக்கு ஓடி வாறத்துக்கு நாலு சொந்தத்தைச் சேர்த்து வச்சிருக்கவேணும். அந்தச் சொந்தம் காடு வரை வாற சொந்தமா இருக்கவேணும்.

சரி பேராண்டி பாட்டின்ர கதையைக் கேட்டதில வயல்பக்கம் போகிறதை மறந்திடாத. இயற்கை அழகை ரசித்துப் போட்டு வந்து அதுன்ர சிறப்பை பாட்டிக்கும் சொல்லு... சரியோ...

பாட்டி வருவா...



○ மாவை நா.கஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகரம் தொடு



அடிவாரத்தில் நின்று
அண்ணார்ந்து மலை
சிகர எழிலை ரசித்தாலும்
மலைக்கவும் வைக்கின்றது
அச்சத்தைத் தூர விலக்கி
உச்சி வரை யேறி
தலை குனிந்து பார்க்க
வளைந்து நெளியும்
மலைப்பாம்பாய்த் தெரியும்
பாதைகள் பார்வையில்
தீர்வைத் தர விரும்பா
அரசியல் போன்று
திகைக்கவும் வைக்கின்றது.

சாரங்கன், சாவகச்சேரி.

## மனிதம் அளிக்கும்



அன்பே என்பது அமைதி தரும்
ஆசை என்பது பகைமை வளர்க்கும்
இனிமை வாழ்வே என்றும் சுகம்
ஈகம் ஒன்றே நிறைவின் வளம்

உண்மை என்பது உயர்வின் படி
ஊக்கம் என்றும் ஆற்றல் தரும்
எண்ணித் துணியின் இடர்கள் விலகும்
ஏற்றம் காண்பது மனிதம் அளிக்கும்

ஒருமை பகையை அழித்து ஒழிக்கும்
ஓங்காரம் புரிந்திடின் ஆங்காரம் அழியும்
அஃகம் நிறையின் அகிலம் செழிக்கும்
ஒவ்வாமை என்பது உடலின் கேடு

கடமை என்பது கண்ணியம் உடையது
காதல் கொள்வது உயிர்மையின் உரிமை
கிளர்ச்சி செய்வது கீழ்மையின் செயலே
கீழ்மை செய்பவர் மேன்மை அடையார்

குயிலின் இனிமை குரலொடு அமையும்
கூடிப் பிரிவது கேட்டினில் முடியும்
கெர்ப்பம் சிதையின் உயிர்மை அழியும்
கேடில் விழிச்செல்வம் கீழ்மை தராது

கொழு கொம்பாய் படரும் செடியின் சிறப்பு
கோவில் என்பது குடிமைகள் சொத்து
கௌசிகன் தவத்தில் வலிமை கொண்டனன்
பேடிமை என்பது அறிவின் சிதைப்பு.

வளவை வளவன்

## சங்கின் ஓசை



எட்டுத்திக்கும் ஓங்கி ஒலித்திட
விஷ்ணு பகவானின் கைகளில் தவழ்ந்து
அனைத்து வேளையிலும் ஒலி தந்து
நம் வலிபோக்கும் நாதம் போல்
அதிகாலை வேளை
வலம்புரிச்சங்கு வீடு தேடிவந்தால்
அதிர்ஷ்டம் என்பர்.
வெள்ளைத் தாளிலே
தமிழ் தெழித்து
பக்கம் மடித்து
விடிகாலை வேளையிலே
வலம்புரி எமது கைகளில் தவழ்கிறதே
அதிர்ஷ்டம் தானே !!
உடன் செய்திகளையும்
உலகச் செய்திகளையும்
பரபரப்பாக பார்க்க வைத்து
விளம்பரங்களைத் தெளிவாகத் தந்து
ஆசிரியர் தலையங்கம்,
இன்னும் பல தகவல்களை
சுவைபடத் தரமாக வழங்கும்
நிறுவனம் வலம்புரி
நாளிதழின் நிர்வாகிகள்,
பணியாளர்கள்,
செய்தியாளர்கள்
அனைவருக்கும் பாராட்டுக்கள்
மேலும் பல ஆண்டுகள்
சங்கின் ஓசை ஒலித்து
மேலும் சிறப்போடு
வெற்றிநடைபோட நல்வாழ்த்துக்கள்.

சின்னையா தயாபரன்,
கலையரசு வீதி, நலாலி தெற்கு.

## தன்னிறைவு எப்போது



தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பெருநாளாம்
உழவர் வாழ்வினிலே உயர்வில்லை
மானியம் தந்தென்ன மருந்து, உரம் தந்தென்ன
சூனியம் வைத்தது போல்
சூழ் பயிர்கள் விளையவில்லை
காரியம் நடப்பதற்காய் கதை சொன்னால் மட்டும்
வீரியம் பிறந்திடுமா
விளைந்திடுமா செந்நெல்லு
பொங்கலோ எமக்கு இல்லை பூரிப்புதானுமில்லை
தானியக் களஞ்சியங்கள் தண்ணீரில் கிடக்கிறது
வானத்து சூரியனை வரவழைத்தால் மட்டும்
தன்னிறைவு என்பது தமிழர்க்கு எப்போது
கண்ணீர்தான் சொந்தம் காசினி உள்ளவரை.

கனே பாக்கியன்



## அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமான சங்குநாதத்தில்
நீங்களும் எழுதலாம்....

- அரசியல்
- இலக்கியம்
- கவிதை
- கட்டுரை

ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி,
தொலைபேசி இலக்கம் என்பவற்றை
குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126

## எனது கிராமமும் இந்தத் தொகுதியில் தான் இருக்கிறது

நடு இராத்திரி
பன்னிரண்டு மணி....
நானோ பாதி நித்திரை
மழையோ கடும் விழிப்பு !

"ஐயோ" என்றொரு குரல்
"சோ" என்ற மழையின் இரைச்சலையும் மீறி
என்னைத் தட்டி எழுப்பிய பொழுது....

பளிச்சிடும் மின்னலே ரோச்சாக
குரல்வந்த பாதையில் நான்... நனைந்தபடி
படலையைத் திறந்து பாதி தூரம்
போகவில்லை "தம்பி கார்பிடித்து வா" என்ற
மாமனின் கரகரத்த குரல்
வழிமறித்த பொழுது......
இரு மைல்களுக்கப்பால் உள்ள
எமது கிராம வாடிக்கைக் "கார" னிடம்
ஓடுகிறேன்.....
அயல் ஊர்களுடன் தொடர்புபடுத்தும்
இரு றோட்டுக்கள் சந்திக்கும் சந்தியிலிருந்து
எனது கிராமம்..... அரைமைல் உள்ளுக்கு !

கரட்டு முரட்டுக் கற்கள்
உறுத்தும் ஓர் ஒழுங்கையும்
மேடு பள்ளங்கள் நிரம்பிய ஓர் தெருவும்
எனது கிராமத்தையும் இரு றோட்டுக்களையும்
இணைத்துக் கொண்டிருக்கின்றன...

நானும் காரும் வந்தபொழுது......
தெருவிற்குக் குறுக்கே [illegible]
மகாவலி கங்கையை [illegible]
காரை இறக்க டிரைவர் மறுக்கிறான்

வெள்ளமும் நானும் போராடி
இறுதியில் வெற்றி எனக்குக் கிடைத்ததால்
மறுகரையில் காரை விட்டு
மாமனின் வீட்டிற்கு ஓடிவருகிறேன்

நாட்டு வைத்தியர் நாடியைப் பிடித்து
"நான் செய்வதற்கு எதுவும் இல்லை
ஒட்சிசன் கொடுத்தால் நோயாளி பிழைப்பார்"
என்று சொல்லிய காரணத்தால்.....
ஐந்து மைல்களுக்கப்பால் உள்ள
அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல
என்னையும் காரையும் எதிர்பார்த்திருந்தனர் !

[illegible]
[illegible]
கார் வரமுடியாத காரணத்தை !

வேறு பாதைகளும் இல்லை
நோயாளியை எடுத்துச் செல்ல
அதனால்
வருத்தக் காரனின் உயிர்போய்க்
கொண்டிருக்கிறது
வந்தவர்களும் அதைப்
பார்த்துக் கொண்டிருக்கிறோம் !
எம்.பி. சொல்கிறார்

"எனது தொகுதியின்
எல்லாக் கிராமங்களுக்கும்
போக்குவரத்து வசதிகள்
ஆக்கிக் கொடுத்திருக்கிறேன் !".



ஆகசி. கந்தசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## இலங்கைக்குத் தலையிடியைக் கொடுக்கும் சீன- இந்திய நாடுகள்

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

மிகச் சிறந்த நாடகப் படைப்பாளி,குழந்தை சண்முகலிங்கம் அவர்கள் காலமாகி விட்டார் என்ற செய்தி அறிந்து மிகுந்த துயரடைகின்றோம்.

அவரின் மறைவு எங்கள் தமிழ் இனத்திற்கும் நாடகத்துறைக்கும் பேரிழப்பாகும்.

சமூக அவலங்களை நாடகத்தினூடாகச் சித்திரித்த-மிகுந்த நகைச்சுவை உணர்வுமிக்க குழந்தை சண்முகலிங்கம் அவர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அநுர தலைமையிலான அரசாங்கத்தின் மீது மக்கள் அதீதமான எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கினம். ஆனால் அதை நிறைவேற்றக் கூடிய வல்லமை அநுர அரசாங்கத்திடம் இல்லை எண்டு தான் நினைக்கிறன்.

**கங்காணி:-** சீன விஜயத்தின் போது ஜனாதிபதி அநுரவுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஆனாலும் அநுரவின்ர முகத்தில மலர்ச்சியும் மகிழ்ச்சியும் இருக்கவில்லை.

**மூப்பர்:-** வெளியில செங்கம்பள வர



குழந்தை சண்முகலிங்கம்

வேற்பைக் கொடுத்தாலும் கதைக்கிறபோது மிகவும் இறுக்கமாகத் தான் சீனா கதைத்திருக்கும்.

**சாத்திரியார்:-** அதெண்டால் உண்மை தான். இலங்கை மீதான தலையீட்டை சீனா இனி ஒருபோதும் கைவிடமாட்டாது. அதேநேரம் சீனாவுடன் நெருங்கிய தொடர்பை இலங்கை அரசாங்கம் வைத்திருப்பதை இந்தியாவும் விரும்பாது.

சுருங்கச் சொன்னால், சீனாவும் இந்தியாவும் இலங்கைக்கு ஒரு தேவையற்ற தலையிடி எண்டு தான் சொல்ல வேணும்.

**சிறாப்பர்:-** இதைவிட இன்னுமொரு பிரச்சினையும் இருக்கத்தான் செய்யுது.

**கங்காணி:-** என்ன சிறாப்பர் சொல்லுறியள்.

**சிறாப்பர்:-** மகிந்த ஆட்சியில இருந்தால், அதை சஜித் கடுமையாக எதிர்க்கமாட்டார்.

அதேபோல ரணில் ஜனாதிபதியாக இருந்தால் அதற்கு மகிந்தவும் அதே சமயம் சஜித்தும் கடும் எதிர்ப்பில்லை.

இந்த இரண்டு பேருக்கும் அப்பால, சஜித் ஜனாதிபதியாக இருந்தால் மகிந்தவும் ரணிலும் சஜித்தோட சேர்ந்து போகத் தான் விரும்புவினம்.

ஆனால் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக இருக்கிற போது மகிந்த, ரணில், சஜித் உள்ளிட்ட அத்தனை சிங்கள அரசியல்வாதிகளும் அநுரவைக் கடுமையாக எதிர்ப்பினம். மறைமுகமாகக் கடும் அழுத்தங்களைக் கொடுப்பினம்.

இதில அநுரவின்ர அரசாங்கத்தின் பயணம் என்பது மிகவும் கடுமையான-கரடுமுரடான பாதையாகத் தான் இருக்கும்.

**சாத்திரியார்:-** சிறாப்பர் சொல்லுறது நூறு வீதம் உண்மை. அண்மையில மகிந்த ராஜபக்ஷ தெரிவித்த ஒரு கருத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதில அநுர குமார திசாநாயக்கவின்ர அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழத் தயாராகி விட்டினம் எண்டு மகிந்தனார் சொல்லுகிறார்.

அவர் சொல்லுறது உண்மை, பொய் என்பதற்கு அப்பால, அப்படியொரு சிந்தனை எதிர்க் கட்சிகளிட்ட இருக்குது என்பது தான் என்ர கருத்து.

**பண்டிதர்:-** பெட்டியில காசில்லாமல் திருவிழாச் செய்ய முடியுமோ. நாட்டில ஏற்பட்ட பணத் தட்டுப்பாடு அநுர அரசாங்கத்திற்கும் பெரும் சவாலாகத் தான் இருக்கும்.

**விதானையார்:-** நாட்டின்ர பொருளாதார மந்தம் ஒருபுறமிருக்கட்டும். ஜனாதிபதி அநுர சொன்ன வாக்குறுதிகள் கூட, இன்னமும் அமுலாகவில்லைத் தானே!

**சிறாப்பர்:-** வாக்குறுதிகளை நிறைவேற்றுறது ஒருபுறமிருக்க, ஜனாதிபதி அநுரவின்ர உத்தரவில அகற்றப்பட்ட செக்பொயிண்டுகள் திரும்பவும் அதே இடத்தில போடப்பட்டிருக்குது.

உதாரணத்திற்கு எழுதுமட்டுவாள் ஏ-9 வீதியில இருந்த செக்பொயிண்ட் திரும்பவும் அந்த இடத்தில அமைக்கப்படிருக்குது எண்டால் பிறகென்ன.

**வாத்தியார்:-** விதானையார் சொல்லுறது உண்மை தான். ஆனால், செக்பொயிண்டுகளை அகற்ற வேண்டாம் எண்டு நாங்கள் கேட்கிற அளவில தான் நிலைமை இருக்குது.

**மூப்பர்:-** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:-** தீவகத்தில பண்ணை வீதியில-மண்டைதீவுச் சந்தியில இருந்த செக்பொயிண்ட் அகற்றப்பட்டிருந்தது.

ஆனால், தீவக சிவில் சமூகம் அந்த செக்பொயிண்டை திரும்பவும் அமைக்குமாறு கேட்டிருந்தது.

தீவகத்தில இருந்து மாடு கடத்துதல் போதைப் பொருள் கடத்துதல் உள்ளிட்ட சட்டவிரோத செயல்களைத் தடுக்கிறதாக இருந்தால், அந்த இடத்தில ஒரு செக்பொயிண்ட் தேவையாகத் தான் இருக்குது.

அதால தான் சொல்லுறன்; சில செக்பொயிண்ட்டுகளை அகற்றுவது அவ்வளவு நல்லதல்ல. ஏனெண்டால், அந்தளவுக்கு எங்கட இடத்தில மிக மோசமான சட்டவிரோதச் செயற்பாடுகள் நடந்து கொண்டிருக்குது.

இவ்வாறு வாத்தியார் கூற, ஆலடி அமைதியாகியது.

அமைதியைக் குலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:-** அது சரி, எங்கட யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்திற்கு முன்பாக உள்ள சந்தியில-தீவகத்திற்குத் திரும்புகிற வீதி எப்படி இருக்குது எண்டு பார்த்தியளோ.

எவ்வளவு காலமாக அந்த வீதி மிக மோசமாகக் கிடக்குது. ஆனால் அது தொடர்பில எவரும் கவனிக்கிறதாக இல்லை.

அப்படியெண்டால், எங்கட வடமாகாணத்தில அரச நிர்வாகம் எப்படி இருக்குது.



**கங்காணி:-** சாத்திரியார் சொல்லுறது உண்மைதான். எதிர்வரும் 24,25,26 ஆம் திகதிகளில யாழ்.முற்றவெளியில சர்வதேச வர்த்தகக் கண்காட்சி(Trade Fair) நடக்க இருக்குது. இருந்தும் அந்தக் குறிப்பிட்ட சந்தி இன்னமும் குண்டும் குழியுமாக மழை வெள்ளம் தேங்கி நிற்கிற இடமாக உள்ளது.

இருந்தும் அதனை ஒருவரும் கண்டுகொள்ளவில்லை எனும் போது, அநுரவின்ர அரசாங்கமும் பத்தோட பதினொன்று எண்டல்லோ நினைக்க வேண்டி இருக்குது.

இவ்வாறு கங்காணி கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

433

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# தேன்



தேன் மிகவும் சுவையா னது அதனால் தான் நம் முன் னோர்கள் தமிழை தேனுடன் ஒப்பிட்டு தேனிலும் இனியது தமிழ் என்று சொல்லி வைத் திருக்கிறார்கள். பண்டைய தமிழ் மருத்துவ முறைகளிலே தேன் ஒரு முக்கிய பங்கு வகித்திருக்கிறது. இது மருத்து வத்துறையில் 5000 வரு டங்களுக்கு மேலாகப் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

இத்துணை அதீத இனிப்புச் சுவை கொண்ட தேன் உண் மையிலேயே உடல் நலத் துக்கு பாதுகாப்பானதா? இது சம்பந்தமான ஆய்வுகள் ஏதா வது நடத்தப்பட்டிருக்கின்ற னவா? நீரிழிவு உள்ளவர்கள் இதனைப் பாவிக்கலாமா? என் பது போன்ற பல வினாக்கள் எம்முன்னே எழுகின்றன.

**தேன் என்றால் என்ன?**
அதில் என்னென்ன பதார்த் தங்கள் அடங்கி இருக்கின்றன என்பதை நாம் முதலில் தெரி ந்து வைத்திருக்கவேண் டும்.

தேனிலே பிரக்ரோஸ், குளுக் கோஸ், மோல்ரோஸ், சுக்கு ரோஸ் எனப்படும் 4 வகை யான வெல்லங்கள் காணப்படு கின்றன. அத்துடன் இத்தே னிலே புரதத்தின் அடிப்படை அலகுகளான அமினோ அமி லங்கள் காணப்படுகின்றன.

இவற்றிற்கு மேலதிகமாக தேனிலே பெருமளவு விற்ற மின்கள் செறிந்து காணப்படு கின்றன. விற்றமின் B2,B4, B5, B6, B11, விற்றமின் K விற்றமின் C, போலிக்கமிலம் போன்ற பல விற்றமின்கள் ஒன்றாகக் காணப்படுகின்றன.

இவற்றோடு பல முக்கிய மான கனியுப்புக்களையும் இந்தத் தேன் உள்ளடக்கி இருக்கி றது. இரும்பு, நாகம், கல்சியம், பொட்டாசியம், மக்னீ சியம், செலே னியம்,மங்கனீசு போன்ற பல கனியுப்புக்களின் கலவையாகவும் இது காணப்படுகின்றது.

இவை அனைத்தையுமே தேன் உள்ளடக்கி இருப்பதால் இது உலகிலே கிடைக்கக்கூடிய இயற் கையான விற்றமின் ரொனிக்கு களில் முதல்த் தரமானதாக கணிக் கப்படுகிறது.

தேனிலே நோய்க்கிருமிகளை கொல்லும் தன்மையும் அவற்றின் பெருக்கத்தைத் தடுக்கும் தன்மை யும் இருப்பது பல ஆய்வுகளின் மூலம் தெளிவாக நிரூபிக்கப்பட்டி ருக்கிறது.

காயங்களுக்கு இதனைப் பூசி விடும்பொழுது இது தொற்று ஏற்ப டாமல் தடுக்கும் ஒரு கவசமாகவும் தொற்று ஏற்படுத்தும் கிருமிகளை கட்டுப்படுத்தும் ஒரு மருந்தாகவும் தொழிற்படுவதாக ஆய்வுகள் காட்டி நிற்கின்றன.

அத்துடன் தேனானது ஒரு அன்ரி ஒக்சிடென்ற் ஆகத் தொழிற்பட்டு உடற்கலங்களைப் பாதுகாக்க உதவுகிறது என்பதும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

தேன் சம்பந்தமான ஆரம்ப ஆராய்ச்சிகள் குருதியிலே HDL எனப்படும் நல்ல கொலஸ்ரோலை அதிகரிப்பதற்கும் trigliceride எனப்படும் தீய கொழுப்பை குறைப் பதற்கும் தேன் உதவி புரிகின்றது என்பதை காட்டி நிற்கின்றது. உடலில் ஏற்படும் அழற்சி பல நோய்களுக்கு வித்திடுகின்றது. தேன் Inflammation என்று சொல்லப்படுகின்ற உடலில் ஏற்ப டும் அழற்சிகளை கட்டுப்படுத்து கின்றது. இதன்காரணமாக இது நாட்பட்ட வரண்ட இருமலையும் தொண்டை அழற்சியையும் கட்டுப் படுத்த பயன்படுத்தப்பட்டு வரு கிறது. அத்துடன் குடலில் ஏற்படும் அழற்சிகளைக் குறைத்து வயிற் றோட்டத்தைக் கட்டுப்படுத்த உதவு கிறது.

**ஒரு வயதிற்கு உட்பட்ட குழ ந்தைகளுக்கு தேன் கொடுப் பது நல்லதல்ல.**

நீரிழிவு உள்ளவர்களுக்கு தேன் சிறந்ததா? என்பது சம்பந்தமாக பல்வேறுபட்ட ஆராய்ச்சி முடிவுகள் கிடைத்தவண்ணம் இருக்கின் றன.

நீரிழிவு உள்ளவர்களில் இரத்தத்தின் கொழுப்பை குறைப் பதற்கும் இன்சுலினின் சுரப்பு வீதத்தை அதிகரிப்பதற்கும் தேன் உதவுகின்றது.

ஆனால் அதிகளவு தேனை உட்கொண்டால் நீரிழிவு உள்ள வர்களிலே குருதி குளுக்கோசின் அளவு அதிகரிப்பது அவதானிக் கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அதிகரிப்பானது அதனை ஒத்த சீனி உட்கொள்ளும் பொழுது ஏற்படும் அதிகரிப்பினும் பார்க்க குறைவாக காணப்படுகிறது.

எனவே நீரிழிவு உள்ளவர்கள் அதிகளவு தேன் உட்கொள்ளுவது பாதுகாப்பானதா என்பது பற்றி விரிவான ஆய்வுகள் பல செய்யப் படவேண்டிய தேவை இருக்கி றது. ஆனால் தேனானது சீனி யிலும் பார்க்க பல மடங்கு பாது காப்பானது என்பது தெளிவானது, உறுதியானது.

உலகளாவிய அளவிலே வருடம் தோறும் 1.3 மில்லியன் தொன் தேன் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. காரணம் இதனை உணவாகவும் மருந்தாகவும் விற்றமின் ரொனிக் ஆகவும் வெளிப்பூச்சு மருந்தாகவும் பலராலும் பாவிக்கப்பட்டு வருவதால் இதன் தேவை அதி கமாக இருக்கிறது. எமது பிரதேசங்களிலே தேன் உற் பத்தியின் அளவு மிகவும் குறைவாக இருக்கிறது. இது ஊக்கு விக்கப்பட வேண்டும். பயிர்க ளுக்கு மருந்து விசிறுவது தேனீக்களை அழித்துவிடுகின் றது.

ஒரு விவசாயி தனது தோட்டத் திற்கருகே தேனீ வளர்க்கிறான் என்றால் அவன் ஒரு இயற்கை விவசாயி என்பதை உறுதிப்படுத்த வேறு சான்றுகள் தேவைப்படாது. மருந்தடிக்கும் சூழலில் தேனீ வளர்க்க முடியாது.

எனவே தேனீ வளர்ப்பு மருந்து தெளிக்காத பயிர்ச் செய்கையையும் மறை முகமாக ஊக்குவிக்கும். எனவே தேனீ வளர்ப்பில் நாம் கூடிய அக்கறை செலுத்தி இயற்கையை பாதுகாப்புடன் தேன் உற்பத் தியையும் பெருக்க முயற்சி எடுக்க வேண்டும்.

Dr.சி.சிவன்சுதன்,
பொது மருத்துவ நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 ஆம் திகதி சந்திப்பு.........

# தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு திருப்புமுனையாக அமையும்

## நம்பிக்கை வெளியிட்டார் கஜேந்திரகுமார் எம்.பி



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய அரசியலில் முக்கிய திருப்புமுனையின் ஆரம்பப் புள்ளியாக எதிர் வரும் 25ஆம் திகதி நடைபெற வுள்ள சந்திப்பு அமையும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியின் தலைவரும் பாரா ளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம் பலம் நம்பிக்கை வெளியிட்டுள் ளார்.

சமகால அரசியல் நில வரங்கள் தொடர்பாக யாழ்ப் பாணத்தில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், சில கட்சிகள் தங்களது தேவைக்காக அல்லது புறக் கணிக்கப்பட்டதாக உணர்ந்து, தனித்து செயற்பட முயல்கின் றன. ஆனால் கடந்த பாராளு மன்ற அமர்வின் போது பாரா ளுமன்ற குழுத் தலைவர்கள் மத்தியில் கலந்துரையாடல் நடந்தது. அது அனைத்துக் கட்சி களையும் ஒருங்கிணைக்க வேண்டிய நோக்கில் அமைந்தது.

இதனைத் தொடர்ந்து எதிர் வரும் 25 ஆம் திகதி நடை பெறவுள்ள சந்திப்பில் பாராளு மன்ற குழுத் தலைவர்களைத் தாண்டி கட்சியின் பிரதிநிதித்து வத்தை உறுதிப்படுத்துவ தோடு, இனப்பிரச்சினை தொடர்பாக அறிவியல் மற்றும் அதிகார ரீதியான பேச்சுவார் த்தைகளை மேற்கொள்ளும் நபர்களையும் இணைக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். இந்தச் சந்திப்பு ஆக்க பூர்வமாக அமைய வேண்டும். கட்சி ரீதியாகப் பேசப்பட்டு ஒரு மித்த முடிவுக்கு வரவேண்டி யது அவசியம்.

எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறும் சந்திப்பு தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு திருப்பு முனையாக அமையும். அர சாங்கம் தனது வசதிக்கேற்ப தமிழ்த் தேசிய அரசியலை நசுக்கும் முயற்சியில் ஈடு பட்டுள்ள நிலையில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை வலியு றுத்தும் தரப்புக்கள் ஒன்று கூட வேண்டும்.

தமிழர்களின் பாரம்பரிய அரசியல் நிலைப்பாட்டை மக்கள் மதிக்க வேண்டும். தமிழ் தேசிய அரசியல், உரிய கௌரவத்துடன் எதிர்காலம் நோக்கி முன்னேற அனை வரும் ஒன்றிணைந்து செயற் பட வேண்டும். இதனை உணர்ந்து செயற்படுவதற்கா கவே இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி-8-33)

# இறக்குமதி செய்யப்படும் இனிப்புப் பண்டங்கள்

## தரம் தொடர்பில் எச்சரிக்கை விடுப்பு

(கொழும்பு)

நாட்டில் இறக்குமதி செய்யப் படும் இனிப்பு பண்டங்கள் மற்றும் உணவுகளின் தரம் தொடர்பில் கட்டுப்பாடுகள் விதிக் கப்பட வேண்டும் என இல ங்கை மருத்துவ சபையின் தலை வர் விசேட வைத்தியர் சுரந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

அதன்படி, இறக்குமதி செய் யப்படும் இனிப்பு பண்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான முறைமை ஒன்று தயாரிக்கப் பட வேண்டும் என்றும் செய்தி யாளர் சந்திப்பின்போது அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"தரமற்ற உணவுகளை உட்கொள்வதன் காரண மாக நுகர்வோர் இன்னல்களு க்கு முகங்கொடுக்கின்றனர்.

அதுமட்டுமின்றி, உணவு ஒவ் வாமை, சுவாச நோய் உள்ளி ட்ட பல பிரச்சினைகளுக்கு மக் கள் முகங்கொடுக்கின்றனர்.

எனவே சந்தைக்குக்கொண்டு வரப்படும் இனிப்புப் பண்டங் கள் மற்றும் உணவுகளின் தரம் தொடர்பில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும்.

இல்லையெனில் அவற் றால் ஏற்படக் கூடிய பாதிப்புக் களைத் தவிர்த்துக் கொள்ள முடியாது" எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி-8)

# முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலான கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலீட்டாளர்கள் எதிர்காலத் தில் செய்ய இருக்கும் முதலீடு கள், எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரச அதி பர் ம.பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற் றது.

இதில் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, தேசிய நல்லிணக்க நிலையத் தின் பணிப்பாளர் பேராசிரியர் விஜித றொகான் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை களை வழங்கினர். (நி-8)

# 15,000 மெற்றிக்தொன் உப்பு அடுத்த வாரம் இலங்கைக்கு

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து 15,000 மெற்றிக் தொன் உப்பு அடுத்த வாரம் இலங்கை க்கு இறக்குமதி செய்யப்படும் என்று அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள் ளது.

இலங்கைக்கு உப்பு இறக்குமதி செய்ய இந்தியாவிலிருந்து இரண்டு இறக்குமதி யாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட் டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் 30,000 மெற்றிக் தொன் உப்பை இலங்கைக்கு இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த பருவமழை காலத்தின் உள்ளூர் உப்பு உற்பத்தியில் ஏற்பட்ட தாக்கத்தைத் தொடர்ந்தே உப்பு இறக்குமதிக்கான தீர்மானம் எடுக்கப்பட் டது.

அதேவேளை, எதிர்கால சந்தை தேவைகளின் அடிப்படையில் அரிசி இறக்குமதி செய்யப்படும் என்று மாநில வர்த்தகக் கூட்டுத்தாபனம் கூறும் அதேநேரத்தில் அரசாங்கம் ஏற்கனவே 7,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்துள்ளது. (நி-8)



**வடமராட்சி கிழக்கு புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய திருவிழாவிற்கான கொடியேற்றம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. கட்டைக்காடு பங்குத்தந்தை அமல்ராஜ் அடிகளார் தலைமையில் கொடியேற்ற நிகழ்வு இடம்பெற்றது.**

**இலங்கையில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாக திகழ்ந்துவரும் புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய திருவிழா திருப்பலி எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

**(படம்:-மகாலிங்கம்)**


# மணிவிழா வாழ்த்து




## திருமதி. கமலவேணி கிருஸ்ணன்

B.A (P.G.D.E), SLTS-I

எமது கல்லூரியில் தமிழ்ப்பாட ஆசிரியராகக்கடமையாற்றி இன்று 19.01.2025 அகவை அறுபதில் தடம் பதிக்கும் மணிவிழா நாயகியை நோய் நொடியின்றி நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழ வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்

- அபிவிருத்தித் திட்ட உதவியாளர்-யாழ்.கல்விவலயம் - 01.07.1994 - 19.05.1996
- ஆசிரியர் நீர்/தோப்பு றோ.க.த.மகாவித்தியாலயம் - 20.05.1996 - 04.09.2011
- ஆசிரியர் யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் - 05.09.2011 - 01.01.2020
- ஆசிரியர் யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி - 02.01.2020 - 18.01.2025

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி.

(3058)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்ற தேசிய பொங்கல் விழா



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத்தில் தேசிய பொங்கல் விழா நேற்று வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின் வழி காட்டலுக்கு அமைய ஆலய முறைப்படி நிகழ்வுகள் பாரம் பரிய கலாசார நிகழ்வுகளுடன் ஆரம்பமாகி காங்கேசன்துறை வீதிவழியாகத் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியினை சென்றடைந்து அங்கு சிறப்புரை மற்றும் கலை நிகழ்வுகள் என்பன இடம் பெற்றன.

இந் நிகழ்வில் புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சர் சுனில் செனவி மற்றும் பிரதி அமைச்சர் கமகதர திசாநாயக்க மற்றும் பெருந்தோட்ட மற்றும் சமூக கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், சிறுவர், மகளிர் விவகார அமைச்சர் சரோஜா போல் ராஜ் மற்றும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திர சேகர் மற்றும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர்களான றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, வைத்தியர் பவானந்தராஜா, கருணநாதன் இளங்குமரன் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-8-33)



மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கிளைச் சங்கமான ஐக்கிய இராச்சியத்தின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட சூரிய மின்சக்தி செயற்றிட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் அருட்சகோதரர் S.சந்தியாகு FSC தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. (படம்:-ஜோசப்நயன்)




இந்திய அரசினதும் இந்திய மக்களின் நிதி பங்களிப்பில் வடமராட்சி வடக்கு சமாசத்திற்கு உட்பட்ட தொழிலாளர்களுக்கு வலைகள் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எஸ். சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றது.

இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் எஸ். ஸ்ரீசாய்முரளி மற்றும் கடற்றொழிலாளர் சங்கத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குள் நான் நல்ல நண்பனாய் இருப்பதோடு, அன்பிற்குரிய ஆசிரியனாகவும் இருக்க வேண்டும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொலிஸ் திணைக்களத்தை கிளீன் செய்யாமல்...

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வெறுமனே சுற்றுச் சூழலைத் தூய்மைப்படுத்துவதை கிளீன் என்ற சொற்பதம் குறித்து நிற்கவில்லை.

மாறாக, இலங்கைத் திருநாட்டில் எங்கெல்லாம் குப்பையும் ஊழலும் அக்கிரமமும் அநியாயமும் இருக்கிறதோ அதையெல்லாம் கிளீன் செய்வதையே கிளீன் ஸ்ரீலங்கா என்ற செயற்றிட்டத்தின் நோக்கம் எனக் கூறப்படுகிறது.

நல்லது. நாடு தூய்மையாக இருக்காத விடத்து நாட்டு மக்கள் தூய கரங்களோடு இருப்பது நடைமுறைச் சாத்தியமன்று.

ஆக, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் முன்னெடுத்துள்ள கிளீன் ஸ்ரீலங்கா என்ற செயற்றிட்டத்துக்கு ஆதரவு வழங்குவது அனைத்துப் பொதுமக்களினதும் தலையாய கடமையாகும்.

இது ஒருபுறமிருக்க, கிளீன் ஸ்ரீலங்கா என்ற முன்மொழிவை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கும் என நம்பலாம்.

கொள்கை இல்லாத செயற்றிட்டம் குருட்டுத்தனம். செயற்றிட்டம் இல்லாத கொள்கை மலட்டுத்தனம் என்கிறார் ஸ்ரீபன் எனும் அறிஞர்.

ஆக, கிளீன் ஸ்ரீலங்கா என்ற முன்மொழிவை அமுலாக்குவதாயின், அதனை எங்கிருந்து ஆரம்பிப்பதென்பது முதன்மைக்குரிய கேள்வி.

ஆம், கிளீன் ஸ்ரீலங்கா என்ற திட்டம் வெற்றி பெற வேண்டுமாயின், முதலில் சட்டம் ஒழுங்கு சீராக இருப்பது அவசியம்.

சட்டம், ஒழுங்கு சீராக இல்லாதவிடத்து அங்கு எதுவும் நேரியதாக இருக்கமாட்டாது.

உதாரணத்துக்கு சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கின்ற பெரும் பொறுப்பு பொலிஸ் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே முதலில் பொலிஸ் திணைக்களம் சுத்தமாக இருக்க வேண்டும். அப்போதுதான் சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு அனைத்துப் பொதுமக்களும் அடிப்படைப் பாதுகாப்புடன் வாழ முடியும்.

எனினும் இலங்கையைப் பொறுத்தவரை பொலிஸ் திணைக்களம் இன்னமும் ஊழல் என்ற பெரும் குப்பையால் மூடப்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த ஒரு பகுதியினர் தமது சேவையை நேர்மையாக ஆற்றுகின்றனர்.

எனினும் ஊழல், பக்கச்சார்பு, செல்வாக்கு என்ற அழுக்கில் தோய்ந்து கிடக்கின்ற ஏனைய பொலிஸ் தரப்புடன் அவர்களால் மல்லுக்கட்ட முடிவதில்லை.

**இதனால் பொலிஸ் திணைக்களம் இன்னமும் நேர்மைத் திறத்துடன் சேவையாற்றவில்லை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.**

ஆக, சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டியவர்கள் நேர்மையினின்று விலகும்போது, எங்ஙனம் நாட்டைச் சுத்தம் செய்ய முடியும்.

எனவே கிளீன் ஸ்ரீலங்கா என்ற வேலைத்திட்டத்தின் முதற்கட்டம் பொலிஸ் சேவையை நேர்மையான – நீதியான – பக்கம்சாராத – ஊழல் அற்ற, உன்னத சேவையாக ஆக்க வேண்டும்.

அதைச் செய்யும்போது நாடு 50 சதவீத சுத்தத்தை அடைந்துவிடும். இது சத்தியம்.

# நாட்டின் இனப்பிரச்சினைக்கு ஓரே தீர்வு சமஷ்டி முறைமையாலேயே கிட்டும்

## தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின் சுமந்திரன்

(திருகோணமலை)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறைமையே தீர்வு தரும். தமிழரசுக்கட்சி இதனைத் தொடர்ந்து அரசிடம் வலியுறுத்தும் என அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று (18) இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கட்சியின் ஒரே இலக்கு சமஷ்டி முறைத் தீர்வு. தற்போது ஒற்றையாட்சி என்றால் என்ன? சமஷ்டி முறை என்றால் என்ன? என்பது பற்றிய விளக்கம் தெரிகிறது.

எழுபது வருட காலமாக பல மாற்றங்கள் இடம் பெற்றுள்ள போதிலும் அரசியல் தீர்வாக இதனையே வலியுறுத்தி வருகிறோம்.

கோட்டாபய அரசாங்கத்தில் இது தொடர்பான வரைபை வரைந்து இது குறித்த தீர்வு தொடர்பில் முன்மொழிவுகளை 2020 டிசம்பர் மாதமளவில் அந்தக் குழுவுக்கு அனுப்பியிருந்தோம். இதில் மறைந்த தலைவர் இரா.சம்பந்தன், சேனாதிராஜா, சித்தார்த்தன், அடைக்கலநாதன் போன்றோர் கையொப்பமிட்டு அனுப்பப்பட்டு சந்திப்பு நடத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தற்போது ஏழு பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளோம். இவர்கள் இந்த விடயங்களுக்குப் பொறுப்பாக இருந்து செயற்படுவார்கள்.

தமிழ் பேசும் பரப்பில் உள்ள மற்றக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படும் என்றார். (ம-7)

## அரசமைப்பு விடயங்களை கையாள எழுவர் அடங்கிய குழு

### தமிழரசின் நேற்றைய கூட்டத்தில் தெரிவு

(திருகோணமலை)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் புதிய அரசமைப்புக்கான உத்தேச வரைவைத் தாமதிக்காமல் உடனடியாக முன்வைக்குமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளதோடு அரசு முன்னெடுக்கும் புதிய உத்தேச அரசமைப்பு விடயங்களைக் கையாள்வதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் ஏழு பேர் கொண்ட குழு ஒன்றைக் கட்சியின் மத்திய குழு நேற்று தெரிவு செய்திருக்கின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் கூட்டம் நேற்று திருகோணமலையில் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றபோது இந்த முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கட்சியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறீதரன், இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், கி.துரைராஜசிங்கம் மற்றும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் ஆகியோர் கொண்ட எழுவர் குழுவே அரசமைப்பு விடயங்கள் தொடர்பான கட்சியின் நடவடிக்கைகளைக் கையாளும் எனத் தெரிவிக்கப்பட்டது.

புதிய அரசமைப்பு உருவாக்க விடயங்கள் தொடர்பில் தேவைப்படும் சமயங்களில் ஏனைய தமிழ்க் கட்சிகளோடு கலந்துரையாடுவது, இது தொடர்பான அரசின்வரைவுத் திட்டங்களை ஆய்ந்து தீர்மானங்களை எடுத்தல்போன்ற விடயங்களை இந்தக் குழுவே கையாளும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## சதொச வர்த்தக நிலையங்களை ஆயிரமாக அதிகரிக்கத் திட்டம்

### அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவிப்பு

நுகர்வோர் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்தவும், நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கவும் நாடு முழுவதும் உள்ள சதொச வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கையை ஆயிரமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வர்த்தக மற்றும் வணிக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் பொதுச் சந்தை வளாகத்திற்கு முன்பாக அமைந்துள்ள சதொச விற்பனை நிலையத்தை புதுப்பித்த பின்னர் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், கடந்த 3 மாதங்களில் பொருட்களின் விலைகளை 17% குறைக்க அரசாங்கத்தால் முடிந்தது.

2025 ஆம் ஆண்டுக்குள் வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்வதற்காக 150க்கும் மேற்பட்ட சதொச வர்த்தக நிலையங்களைத் திறக்க நாங்கள் தயாராக உள்ளோம்.

அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கும் மையங்களாக சதொச வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கையை ஆயிரமாக அதிகரிக்க நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

கடந்த மூன்று மாதங்களில் பொருட்களின் விலையை 17% குறைத்துள்ளோம். கடந்த மாதம் 40 அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் 8% குறைக்கப்பட்டுள்ளன.

எனவே பொருட்களின் விலைகளைக் குறைத்து, பொதுமக்களுக்குக்குறைந்த விலையில் பொருட்களை வழங்குவதற்காக சதொச வலையமைப்பை விரிவுபடுத்த நாங்கள் பணியாற்றி வருகிறோம் என்றார். (ம-7)

## நெல் அறுவடைக்கு அனுமதி மறுப்பு

### மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போக அறுவடைக்குத் தீர்மானிக்கப்பட்ட திகதிக்கு முன்னதாகவே சில விவசாயிகளுக்கு அறுவடைக்கு அனுமதி வழக்கப்பட்டமையினால் தாங்கள் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவித்து விவசாயிகள் சிலர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளனர்.

மாவட்ட அரசாங்க அதிபரினால் குறித்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாவட்டப் பிராந்தியத்தில் நேற்று அவர்கள் முறைப்பாடளித்துள்ளனர்.

தீர்மானிக்கப்பட்ட திகதிக்கு முன்னதாகவே சில விவசாயிகள் அறுவடையில் ஈடுபடுகின்றமையால் தங்களது தரப்பு வெகுவாக பாதிப்படைவதாகவும் முறைப்பாடளித்த விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துரைத்துள்ள மட்டக்களப்பு மாவட்ட அரசாங்கதிபர் ஜே.ஜே.முரளிதரன், அனர்த்த நிலைமையைக்கருத்திற்கொண்டு ஒரு விவசாயிக்கு மாத்திரம் முன்கூட்டியே அறுவடையை மேற்கொள்வதற்கு அனுமதிவழங்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். (ம-7)

### இலங்கை – சீனா இடையேயான

## நாணயப் பரிமாற்ற ஒப்பந்தம் மூன்றாண்டுக்கு நீடிப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கிக்கும், சீன மக்கள் வங்கிக்குமிடையில் 2021 ஆம் ஆண்டு கையொப்பமிடப்பட்ட இருதரப்பு நாணயப் பரிமாற்ற ஒப்பந்தம் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மூல ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடந்த ஆண்டின் இறுதியில் இவ்ஒப்பந்தம் வெற்றிகரமாக நீடிக்கப்பட்டதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தம் 10 பில்லியன் சீன யுவான் (சுமார் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள்) நாணய மாற்று வசதி மூலம் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நிதி ஒத்துழைப்பை தற்போதைய ஒப்பந்தம் பிரதிபலிக்கிறது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி.நந்தலால் வீரசிங்க இலங்கை மத்திய வங்கியின் சார்பாக இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

மேலும் சீன மக்கள் வங்கி சார்பில் அதன் ஆளுநர் பென் கோன்ஷெங் அதில் கையெழுத்திட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றங்களை ஏற்படுத்தித் தருமாறு கோரி

# தமிழ் தேசிய இளைஞர் பேரவை ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைப்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உடனடி மாற்றங்களை ஏற்படுத்தித் தருமாறு தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, கிளிநொச்சி மாவட்டம் யுத்தத்தினால் நலிவடைந்து வளர்ந்து வரும் மாவட்டம் என்பது தாங்கள் அறிந்ததே. இம்மாவட்டத்தின் நகர அபிவிருத்தியில் உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டிய விடயங்களைத் தங்களிடம் முன்வைக்கிறோம்.

1. கிளிநொச்சியில் பரந்தன் சந்தி, டிப்போ சந்தி, கரடிப்போக்கு சந்தி, காக்காக் கடைச் சந்தி மற்றும் வைத்தியசாலை முன்பாக மின்விளக்குச் சமிக்ஞை அமைக்க வேண்டிய தேவை உள்ளது.

2. பரந்தன் முதல் பல்கலைக்கழக சந்திவரை இரு வழிப் பாதையை அமைக்க வேண்டிய தேவை உள்ளது.

3. நகர்ப் பகுதிகளில் உள்ள பாதசாரி கடவைகளில் தெரு விளக்குகளை அமைத்துத் தர வேண்டி உள்ளது.

4. பரந்தன் முதல், பல்கலைக்கழக சந்திவரை தெரு விளக்குகளை A9 வீதியில் அமைத்து தர வேண்டிய தேவை உள்ளது.

5. கிளிநொச்சி நகரில் சுற்றுவட்டம் ஒன்றை அமைத்து, மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்றையும் அமைத்து நகர வசதிகளை ஏற்படுத்தித் தாருங்கள்.

மேற்படி விடயங்களை மேற்கொண்டு தருவதன் மூலம் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துக்களைத் தவிர்க்க முடியும் என எதிர்பார்த்து இந்தக் கோரிக்கையை விடுகிறோம்.

பொருத்தமான நடவடிக்கை எடுத்து மாவட்டத்தில் மேலதிக அபிவிருத்திகளைச் செய்ய நடவடிக்கை எடுத்து உதவுமாறு கோருகின்றோம் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-8-100-316)

## கிளிநொச்சி நீர் சுத்திகரிப்பு பணிகளை பார்வையிட்ட அமைச்சர்



(தருமபுரம்)

உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கிளிநொச்சி நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகளை அமைச்சர் கருணாதிலக பார்வையிட்டார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட நகர அபிவிருத்தி, நிர்மாணத் துறை, வீடமைப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் அநுர கருணாதிலக மற்றும் பிரதி அமைச்சர் ரி.பி சரத் ஆகியோர் கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு விஜயம் செய்து அதன் பணிகளைப் பார்வையிட்டுள்ளனர்.

இந்த விஜயத்தின் போது கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் முரளிதரன் மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் வடக்கு மாகாண பிரதிபொது முகாமையாளர், உதவி பொது முகாமையாளர், பொறியியலாளர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-8-316)

## பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை பார்வையிட்டார் ரவிகரன் எம்.பி



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகப் பிரிவிற்குட்பட்ட உடையார்கட்டு, வள்ளிபுனம், தேவிபுரம் ஆகிய பகுதிகள் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

விவசாய நிலங்களை வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். அந்தவகையில் உடையார் கட்டு கமநலசேவை நிலையப் பிரிவிற்குட்பட்ட உடையார் கட்டுக் குளத்தின் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட 1800 ஏக்கர் நெற்பயிற் செய்கையில் பெருமளவான வயல் நிலங்கள் அறுவடைக்காகத் தயாராக இருந்தநிலையில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

அதேபோல் வள்ளிபுனம் இடைக்கட்டுக் குளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட 175 ஏக்கர் பெரும்போக நெற்செய்கை மற்றும் தேவிபுரம் (அ) பகுதி காளிகோவில் வெளியில் செய்கை பண்ணப்பட்ட 66 ஏக்கர் பெரும்போக நெற் பயிர்ச் செய்கைகளில் பெருமளவான வயல்நிலங்களும் அறுவடைக்குத் தயாரான நிலையில் வெள்ள அனர்த்தத்தால் அழிவடைந்துள்ளன.

இதனால் அப்பகுதி விவசாயிகள் பலத்த இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். இந் நிலையில் தமது பாதிப்பு நிலைதொடர்பில் இதுவரையில் உரிய தரப்பினர்கள் எவரும் வருகைதந்து பார்வையிடவில்லை என விவசாயிகளால் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் முறையிடப்பட்டதுடன் வெள்ள அழிவிற்கான நிவாரணங்களைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறும் விவசாயிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந் நிலையில் விவசாயிகளின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த பாராளுமன்ற உறுப்பினர் இது தொடர்பிலான கோரிக்கைக் கடிதங்களைத் தம்மிடம் கையளிக்குமாறு விவசாயிகளிடம் கேட்டுக்கொண்டதுடன் உரியதரப்பினருடன் பேசி விவசாயிகளுக்குரிய இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (நி-8-299)

## முல்லை பொது வைத்தியசாலை

# வளப்பற்றாக்குறையை நிவர்த்திக்க விரைவில் நடவடிக்கை

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ரவிகரன் எம்.பி

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் காணப்படும் வளப்பற்றாக் குறைகள் தொடர்பில் தாம் சுகாதார அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்வரும் நாட்களில் பிரதமருடைய கவனத்திற்கும் கொண்டு வந்து முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் நிலவும் சிக்கல் நிலைமைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் நிலவும் வளப்பற்றாக்குறைகள் தொடர்பில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது. இதுதொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை நிர்வாகத்தினர் அண்மையில் என்னைச் சந்தித்து, வைத்தியசாலையிலுள்ள வளப்பற்றாக்குறை தொடர்பில் கலந்துரையாடினர்.




அதில் முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் கண்வைத்தியர் இல்லாத நிலைமை, ஆண் நோயாளர்களுக்கானதும், பெண் நோயாளர்களுக்குமான விடுதிப் பற்றாக்குறையால் நோயாளர்களைப் பராமரிப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல் உள்ளிட்ட வைத்தியசாலையின் பல்வேறு வளப் பற்றாக்குறை தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தினர் என்னிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அத்தோடு வைத்தியசாலையில் நிலவும் இந்த வளப் பற்றாக்குறைகள் தொடர்பிலான மகஜர் ஒன்றினையும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் என்னிடம் கையளித்திருந்தனர்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தொடர்ந்தும் கவனம் செலுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (நி-8-299)

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி நெல்லியடியில் கையெழுத்துப் போராட்டம்

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி கையெழுத்துப் போராட்டம் நேற்று சனிக்கிழமை நெல்லியடி நகரில் இடம்பெற்றது.

போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கில் கையெழுத்து போராட்டம் இடம்பெற்று வருகிறது.

சிறைகளில் [illegible] தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி ஜனாதிபதியிடம் மனு கையளிப்பதற்காகவே இக் கையெழுத்து பெறப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8-[illegible])



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதிரி படங்களை...

டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு துப்பாக்கிதாரிகளைக் கைது செய்ய மன்னார் பொலிஸார் பொதுமக்களிடம் உதவி கோரியுள்ளனர்.

மன்னார் நீதவான் நீதிமன்றத்துக்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர், அங்கு இருந்த நான்கு நபர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டுத் தப்பிச் சென்றிருந்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நால்வரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர்களில் இருவர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், நீதிமன்றத்துக்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு துப்பாக்கிதாரிகளின் தோற்றத்திற்குச் சமமான இரண்டு படங்களை வெளியிட்டுள்ளனர்.

இந்தப் படங்களில் உள்ள நபர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைத்தால் மன்னார் பொலிஸ் நிலையத்தின் 071 859 1363 அல்லது 023 222 3224 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர். (ம-7)

## புங்குடுதீவில்...

ளார்.

இவர் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் வீட்டில் இருந்து வெளியே சென்றுள்ள நிலையில் மீண்டும் வீடு திரும்பாததால் இவரது உறவினர்கள் இவரைத் தேடும் பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்று அப்பகுதியில் உள்ள குளம் ஒன்றிலிருந்து குறித்த நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த குளத்திற்கு அருகிலிருந்து இவரது துவிச்சக்கரவண்டி மற்றும் ஆவணங்கள் என்பவை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. (ம-7)

## திருவள்ளுவர்...

மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சுனில் செனவி, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத் தூதர் சாய் முரளி, யாழ்.மாநகர ஆணையாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம-7,33)

## சாவகச்சேரியில்...

பேரில், சாவகச்சேரி பொலிஸ் நிலைய அதிகாரிகள் பன்றித் தலைச்சி அம்மன் கோயிலுக்கு அருகே உள்ள பகுதியில் சோதனை மேற்கொண்டு, டிப்பர் வாகனங்களில் கடல் மணல் ஏற்றியவர்கள் உரிய அனுமதிப் பத்திரம் இல்லாமல் அதனை எடுத்துச் செல்லும்போது சுற்றிவளைத்தனர் .

இதனைத் தொடர்ந்து, இந்த இரு டிப்பர் வாகனங்களின் சாரதிகளை சாவகச்சேரி நீதிமன்றத்திற்கு முற்படுத்தி, அவர்கள் மீது மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கூறினார். (ம-7)

## வடமராட்சியில்...

இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் அதேவேளை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் சம்பவம் தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பொதுமக்களின் உதவியோடு மிதவையை மீட்கும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர். (ம-7)

## யாழ்.நகைக்...

புலனாய்வுப் பிரிவு (சிஐடி) எனத் தெரிவித்து 30 இலட்சம் ரூபாய் பணத்தை பறித்துச் சென்ற சம்பவம் இடம்பெற்றது.

குறித்த சம்பவம் தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து கண்காணிப்புக் கமராக்களின் உதவியுடன் குற்றவாளிகளைக் கைது செய்யும் நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

இதனடிப்படையில் சுன்னாகம் பகுதியில் நேற்று முன்தினம் பிரதான சந்தேக நபர் கைதானார்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் கண்டியில் நேற்று மூவர் கைது செய்யப்பட்டனர். (ம-7)

## சிவா பசுபதி...

இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபர் தேசமான்ய சிவா பசுபதி அவுஸ்திரேலியா சிட்னியில் நேற்றுக் காலமானார்.

சிவகுமாரன் பசுபதி என்ற இயற்பெயர் கொண்ட சிவா பசுபதி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொழும்பு ஆனந்தாக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

இலங்கைத் தமிழ் முன்னணி சட்டத்தரணியும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சிவா பசுபதி, அரச வழக்குரைஞர்களின் இயக்குநராகப் பணியாற்றினார்.

1974 முதல் 1975 வரை அரசுத் தலைமை வழக்குரைஞராகவும், பின்னர் அவர் 1975 முதல் 1988 வரை சட்டமா அதிபராகவும் பணியாற்றினார்.

2002இல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கும் இடையில் பேச்சுகள் தொடங்கியபோது, விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுவுக்கு உதவவும் ஆலோசனைகளை வழங்கவும் விடுதலைப் புலிகளால் நிறுவப்பட்ட அரசியல் விவகாரக் குழுவுக்கு சிவா பசுபதி சட்ட ஆலோசகராகப் பணியாற்றினார். (ம-7)

## ஆலயங்களை...

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசியதைப்பொங்கல் நிகழ்வில் பங்பற்றுவதற்காக வந்திருந்த புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி மற்றும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோர் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சாரிய தேசிகரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டனர்.

இதன்போது ரிஷி தொண்டுநாதன் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தனர்.

இச்சமயத்தில், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், வடக்கு மாகாணத்தில் அதிகரித்துவரும் போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாவனைகளை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுத்தார்.

மேலும் கீரிமலை, பலாலி வீதியை 34 ஆண்டுகளாக மூடிவைத்திருக்கின்ற நிலையில் இன்னமும் அதனை திறந்துவிடாதிருப்பதில் நியாமில்லை என்று சுட்டிக்காட்டினார், உயர் பாதுகாப்பு வலயங்களை மற்றும் விடுவிக்கப்படாத பகுதிகளில் உள்ள ஆலயங்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் அப்பகுதிகளை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறும் கோரினார்.

அவ்வாறு விடுவிக்கப்படாதுள்ள ஆலயங்கள் மற்றும் அவற்றுக்கான நிலங்கள் சம்பந்தமான விபரங்கள் ஜனாதிபதி அநுர குமார திஸாநயக்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் ஆறுதிருமுருகன் குறிப்பிட்டார்.

அச்சமயத்தில் கருத்து வெளியிட்ட அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி,

கொழும்பில் வெவ்வேறு காரணங்களுக்காக மூடிவைக்கப்பட்டிருந்த வீதிகள் இப்போது திறக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் வடக்கிலும் ஏலவே நாம் முக்கிய வீதியொன்றை திறந்துள்ளோம். ஏனைய வீதிகளும் போக்குவரத்துக்காகத் திறந்து வைக்கப்படும்.

ஆலயங்கள் பற்றிய விபரங்களை நீங்கள் ஜனாதிபதியிடத்தில் அனுப்பியுள்ள நிலையில் அதுபற்றிய விபரங்களை நான் அவரிடத்தில் பெற்றுக் கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்கின்றேன் என்றார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.01.18
சீட்டிழுப்பு இலக்கம் 5720
B 1 1 7 5 8 1
அத சம்பத B 7 5 8 1
சீட்டிழுப்பு இலக்கம் 295

தன நிதானய
திகதி - 2025.01.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1750
X 27 43 48 65 X
70699

மெகா பவர்
திகதி 18/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2068
C 01 11 18 49 69

லக்கி 7 VIP
திகதி 2025.01.18
சீட்டிழுப்பு இலக்கம் 546
Q 2 2 9 6 9 2 Q

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3962
சீட்டிழுப்பு திகதி | 18.01.2025
A 16 54 55 66
A

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.18
சீட்டிழுப்பு இலக்கம் 1029
கடகம் 23 24 27 57 கடகம்
79661 34

உத்தியோகபூர்வ முடிவுகள்
18.01.2025 வெற்றி வாரம் 428
T 8 5 5 0 6 5
97061
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29.379.504.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2694
சீட்டிழுப்பு திகதி 2025.01.18 தினம் சனிக்கிழமை
04 26 40 75 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,691,511.20

சனிதா
திகதி 18.01.2025 வெற்றி வாரம் 4855
14 38 58 60 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,243,304.40
82623

சசிரி
603
18.01.2025 சனிக்கிழமை
02 38 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4406
சீட்டிழுப்பு திகதி 18.01.2025 தினம் சனிக்கிழமை
05 11 18 19 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,274,654.00
172096

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 30 23 36 44 65
1870
18.01.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.562,304,693.40

சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2520
சீட்டிழுப்பு திகதி: 2025.01.18
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,870,780.80
ADA KOTIPATHI
06 25 43 67 E
749880


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

யாழ். இந்து, 1993 ஆம் ஆண்டு பிறந்த, லக்கினத்தில் சூரியன் செவ்வாய் உள்ள, சுவாதி நட்சத்திரம், துலாம் ராசி, சித்த மருத்துவத்துறை பட்டதாரி யாழ். கைதடி சித்த மருத்துவ பீடத்தில் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றும் மணமகளுக்கு மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு :

**077 036 5792**
**075 714 6899**

(3050)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## புதிய கல்வியாண்டுக்கான [2025]

பூபாலசிங்கம் புத்தகசாலையின் அதிரடி விலைக் கழிவுகள்

- கொப்பிகள் - 50%
- பாடப் புத்தகங்கள் - 10% - 20%
- பாடசாலை உபகரணங்கள் - 10% - 20%
- வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு

(ஏ.எஸ்.ஜெபயர், சந்திரகுமார், கு.வி.அச்சகம், ஏனைய வெளியீடுகள்) (C-2079)



இல.04, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். 021 222 6693 | வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம். 021 222 1637

## WIN REPAIR

உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/C களும் பழுதடைந்து விட்டதா? உங்கள் இடத்திற்கே வந்து திருத்தித் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு :

**076 834 6136** (3062)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322 Visit Visas
077 77 19 322 Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-2081)

## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 228/= |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= |
| 1Kg றவை | - 285/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 275/= |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 399/= |
| 1Kg தீட்டல் பச்சை | - 250/= |
| 1Kg சர்க்கரை | - 260/= |
| 1Kg கடலை | - 475/= |
| 1Kg பயறு | - 550/= |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 640/= |
| 1Kg பொன்னி அரிசி | - 235/= |
| 1Kg சம்பா(உள்நாடு) | - 240/= |
| 1Kg உளுத்தம் பருப்பு No.1 | - 760/= |
| 10Kg விஜிதா அரிசி | - 2599/= ~~3900/=~~ |
| 400g லக்ஸ்பிறே பால்மா | - 975/= ~~1050/=~~ |

400g Anchor 990/= ~~1050/=~~



1 டின் தீயாப்பு 160/= ~~240/=~~



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (757)

Happy Supermarket 0777 8080 30

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%

- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள் தொடர்புகளுக்கு : (531)

**075 033 6759**

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 25 வயதுடைய செவ்வாய்க் குற்றமற்ற அரச பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரி மணமகளுக்கு தகுந்த IT, விஞ்ஞானப் பட்டதாரி/ பொறியியலாளர் மணமகன் தேவை. தரகர் தேவையில்லை. (751)

**070 403 7634**

## வேலையாட்கள் தேவை

பொருட்களை விநியோகம் செய்யும் வாகனத்திற்கு பொருட்களை விநியோகம் செய்து பணம் வசூலிப்பதற்கு உதவியாளர் தேவை. (25 - 45 வயதிற்கு உட்பட்டவர்கள்)

சம்பளம் : 30,000 முதல் 40,000 வரை நிபந்தனைக்குட்பட்டது.
குறிப்பு : திருநெல்வேலிக்கு அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் மட்டும்.

தொடர்புகளுக்கு : **076 328 0381** (3049)

## X MARD

கோப்பாய், மருதனார்மட கிளைகளில் இதே விலைகளில் பொருட்களை கொள்வனவு செய்ய முடியும்.

| | | | |
|---|---|---|---|
| Rs. 229.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs. 389.00 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 979.00 Max 1 PCS Anchor 400g | Rs. 289.00 Bulk றவை | Rs. 49.00 ~~80~~ Anchor Yoghurt | Rs. 1749.00 Max 1 PCS ~~2100~~ Protinex |
| Rs. 339.00 ~~425~~ Vim Liquid | Rs. 2499.00 ~~3000~~ Vitagen Vannila | Rs. 339.00 ~~390~~ Sunlight Powder Rose | Rs. 1129.00 ~~1190~~ Anchor Plus |
| Rs. 139.00 ~~175~~ Santoor Soap | Rs. 399.00 ~~480~~ Chick Shampoo | Rs. 2999.00 ~~3335~~ Diabeta Plus | Rs. 349.00 ~~500~~ Ocean Star Mackerel |
| Rs. 919.00 5kg ~~1150~~ Prima Wheat Flour | Rs. 3349.00 Max 1 PCS ~~3900~~ Sustagen 400g | Rs. 149.00 ~~200~~ Noodles | Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L |
| Rs. 199.00 ~~270~~ Fems 10 Pcs Pads | Rs. 799.00 ~~1200~~ Marvel 16 Pcs | Rs. 459.00 ~~695~~ Cute Baby Wipes | Rs. 2699.00 ~~3000~~ Vijitha 10Kg |

மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
(கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு அருகாமையில்)
074 2327 545

மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும், வட இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்)
074 1011 345 (C-2082)


## 5 ஆம் ஆண்டு நினைவுகளுடன்...



அன்னை மடியில் 09 . 01 . 1945

இறைவன் மடியில் 15 . 01 . 2020

அமரர்

**திருமதி சுபத்திராதேவி தனிகாசலம்பிள்ளை**

திதி : 19.01.2025

ஆண்டுகள் ஐந்து ஓடிவிட்டதம்மா
அள்ளித்தந்த அரவணைப்பு அகலவில்லை
அனைத்தும் ஆருயிர் நினைவுகளாய்
அன்றாடம் எங்களுடன் வாழும் தெய்வமம்மா

ஆசையுடன் குடும்ப குலவிளக்கேற்றி
ஆயிரம் உறவுகளுக்கு நிகராக நீங்களிருந்து
அனுதினம் பிரகாசிக்க நீங்கள் ஆற்றிய
அர்ப்பணிப்போ ஆயிரம் ஆயிரம்

அன்புடனும் பண்புடனும் பழக வழிகாட்டி
ஆனந்தமாய் எம்மை வாழ வைத்தாயம்மா
ஆழ்ந்த கவலையை சுமந்து இன்று
உங்கள் திதியை நினைவேந்துகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!! (C-2070)

"சுபஸ்தான்"
நாச்சிமார்கோவிலடி,
இல. 1036, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

என்றென்றும் நீங்கா நினைவுகளுடன்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் பலாலி வீதி ஊரெழுப் பிள்ளையார் கோவில் முன்பாக 34 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- இருபதடிப் பாதையுடன்
- இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- பலாலி வீதியில் இருந்து 1 Km தூரம்
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சம்

Goldan Real State(pvt) Ltd
Owner and Director
T.Kalaithasan

குரு :
**076 069 1105, 076 298 1105, 077 468 3354** (3048)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.